பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 30 வியாழக்கிழமை (13.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :137

# குண்டுவெடிப்பை தொடர்ந்து திருமலையில் இனக்கலவரம்

## 14 பேர் சாவு; 40 பேர் வரை காயம்; ஊரடங்கு; தமிழர்களின் மீது தாக்குதல்; கடைகள் எரிப்பு!

திருகோணமலை, ஏப். 13

திருகோணமலை நகர மத்தியில் சிங்களவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் மரக்கறிச் சந்தையை ஒட்டி தேங்காய்க் கடை ஒன்றின் பகுதியில் நேற்றுப் பிற்பகலில் பெரும் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதையடுத்து அங்கு இனக்கலவரம் வெடித்தது.

இந்தச் சம்பவங்களில் பதின்னான்கு பேர் வரை உயிரிழந்தனர். நாற்பது பேர் வரை படுகாயமுற்றனர். தமிழர்கள் இலக்குவைத்துத் தாக்கப்பட்டனர். தமிழர்களின் கடைகள், உடைமைகள், வாகனங்கள் காடையர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பரவலாக நகரின் பல இடங்களிலும் தமிழர்களின் கடைகள், வீடுகள் சூறையாடப்பட்டன.

படையினர் பார்த்திருக்க இன வன்முறைக் கொடூரம் சில மணிநேரம் தலைவிரித்தாடியதை அடுத்து நேற்றுமாலை நகரில் உத்தியோகப்பற்றற்ற பொலீஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

நேற்றைய இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இராணுவச்சிப்பாய் ஒருவரும், ஐந்து சிவிலியன்களும் உயிரிழந்ததையடுத்து ஆத்திரமடைந்த சிங்களக் காடையர்கள்குழு தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சொந்தமான கடைகளுக்குத் தீவைத்தது. இதனால், நாற்பதுக்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாகின.

கேணியடி பகுதியிலும் மடத்தடி சந்திக்கு அருகிலும் தமிழ் இளைஞர்கள் சிங்களக் காடையர்களால் வெட்டப்பட்டனர். மத்திய வீதி, லிங்க நகர் பகுதிகளில் உள்ள தமிழர்களின் கடைகள் எரிக்கப்பட்டன. லிங்கநகர் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையமொன்று தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்திற்கு முன்னால் நின்றுகொண்டிருந்த தமிழர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு தமிழர்கள் வெட்டப்பட்டு உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் அவசர அவசரமாக மஹிந்தவுடன் தொலைபேசியில் தொடர்பு

### அப்பாவி மக்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து விசனம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 13

திருகோணமலையில் தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது பற்றிய செய்தி வெளியானதும் - நேற்று மாலையில் - இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவசர அவசரமாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு தமது கவலையை வெளியிட்டார் என்று தெரிகிறது.

நிலைமையைச் சீர்செய்து, அப்பாவி மக்கள் பாதிக்கப்படாமல் - அவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்படாமல் - இருப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், இந்தச் சம்பவம் காரணமாக அமைதிப் பேச்சு பாதிக்கப்படக்கூடாது என்பதையும் - கலவரம் ஏனைய பகுதிகளில் பரவாமல் கட்டுப்படுத்தப்பட

(14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் முக்கிய முடிவு இன்று?

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இன்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் உல்ப் ஹென்றிக்ஸனைச் சந்திக்கின்றார். அதன் பின்னர் அவர் முக்கிய செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்துகின்றார்.

அப்போது அவர் புலிகள் தரப்பின் முக்கிய முடிவுகள் சிலவற்றை அறிவிப்பார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.(எ-க)

### மாணவர்களுக்கு

நாளை கல்விச்சுடர் வெளிவரமாட்டாது.

## தமிழர் தாயகத்தில் மீண்டும் கோரமுகம் திருமலைச் சம்பவம் இதற்கு உதாரணம்

### பொதுஅமைப்புகள் கடும் கண்டனம்

கிளிநொச்சி, ஏப்.13

தமிழர் தாயகப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள ஆக்கிரமிப்புப் படையினர் மீண்டும் தமது கோரமுகங்களை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதன் ஒரு கட்டமாகவே திருமலையில் அப்பாவிகளான எமது உறவுகள் மீது குண்டு வீசியும் வாளால் வெட்டியும் அனர்த்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம். இது தொடர்பாக ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் -

சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் தமது ஆக்கிரமிப்புப் பகுதிகளில் மீண்டும் கோரத் தாண்டவத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

• இதன் விளைவாக தமிழர்களின் தலைநகரான திருமலையில் இன்று (புதன்) 14 அப்பாவி பொதுமக்கள் ஸ்ரீ லங்கா நிர்வாகப் பகுதியில் - இராணுவப் புலனாய்வாளர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தம்பாட்டில் புலிகள் கடற்பயணம் செய்ய அனுமதிப்பதில்லை என்பதில் அரசு உறுதி

கொழும்பு, ஏப். 13

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளும், போராளிகளும் வன்னிக்கு வருவதற்குத் தமது சொந்த ஏற்பாட்டில் கடல் பயணம் செய்ய முற்பட்டால் அதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. கடுமையான பதில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு அரசு விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக அறிய வருகின்றது.

முன்னதாக, கிழக்கிலிருந்து தமது படைத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா முடிவுகளை நடைமுறைப்படுத்த அரசுக்கும் புலிகளுக்கும் அமெ. வற்புறுத்து

### தாக்குதல்கள் மற்றும் வன்முறைகளுக்குக் கண்டனம்

கொழும்பு, ஏப். 13

பெப்ரவரி மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும் வருங்காலப் பேச்சுகளுக்கு உகந்த சூழ்நிலையைக் கட்டியெழுப்ப சகல முயற்சிகளை எடுக்கவும் விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் அமெரிக்கா அழைக்கிறது.

- இவ்வாறு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் 'புலிகளின் தாக்குதல்கள் மற்றும் விக்னேஸ்வரன் கொலையை அமெரிக்கா

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதியான குடும்பஸ்தர் சுன்னாகத்தில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஏப்.13

சுன்னாகம் பகுதியில் இளம் குடும்பஸ்தரான ஓட்டோ சாரதி ஒருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் வசிக்கும் செல்லத்துரை கஜேந்திரன் (வயது 30) என்பவரே கொல்லப்பட்டவராவார். பாதுகாப்புக்கருதி அயல்வீடு ஒன்றில் இரவுப் படுக்கைக்குச் சென்றுவிட்டு அதிகாலை வீட்டுக்குத் திரும்பியவேளை வீட்டில் வைத்தே இவர் சுடப்பட்டார் என்று கூறப்படுகிறது. முதல்நாள் இரவு 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தவேண்டும் என்று கேட்டு தனது கணவரை விசாரித்தனர் என்றும் அவர்கள் இருவரும் அரைகுறையாக தமிழில் பேசினர் என்றும் கொலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவன் மீதான தாக்குதல் சம்பவ இடத்திற்கு நீதிவான் விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். பல்கலைக் கழகத்திற்குச் சமீபமாக நேற்றுமாலை சீருடையினரால் மாணவர்கள் தாக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று முன்னி

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகளின் கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்கு தனியார் ஹெலியைப் பயன்படுத்தும் திட்டமும் தோல்வி

## கண்காணிப்புக் குழுத் தலைவர் சளையாத முயற்சி; நேற்று புலித்தேவனுடனும் இன்று தமிழ்ச்செல்வனுடனும் சந்திப்பு

கொழும்பு, ஏப்ரல் 13

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதிகளும், முக்கியஸ்தர்களும் வன்னிக்கு வந்து திரும்புவதற்கு தனியார் ஹெலிகொப்டரை வாடகைக்கு அமர்த்தும் திட்டம் ஒன்று சம்பந்தப்பட்ட தரப்புகளால் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், கொழும்பில் மறைமுகமாகப் போடப்பட்ட முட்டுக்கட்டைகளால் அந்தத் திட்டமும் பிசுபிசுத்துப் போய்விட்டது எனத் தெரிகின்றது.

வழமையாக - அவ்வப்போது - இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டரில் புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னி வந்து தமது தலைமையைச் சந்தித்துவிட்டுத் திரும்புவதே ஒழுங்கு.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு அந்த வசதியைப் புலிகளின் தளபதிகளுக்கு வழங்க மறுத்துவிட்டது.

வேண்டுமானால், கடல் மார்க்கமாகத் தனது கடற்படைப் படகுகள் மூலம் போய் வருவதற்கான அனுமதியையும், ஒழுங்கையும் செய்துதரலாம் என அரசு கூறியுள்ளது.

கடற்படையினரின் படகில் பயணிக்கும் திட்டத்தை அடியோடு புலிகள் நிராகரித்துவிட்டனர். அரசு உரிய ஒழுங்குகள் செய்யாவிட்டால் தமது சொந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டோடு புலிகளின் கிழக்குத் தளபதிகள் வன்னிக்கு வந்து திரும்புவர் எனப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

அப்படிக் கடல் பயணம் இடம்பெற அனுமதிக்கமாட்டோம் என்று அரசு கூறியுள்ளது. புலிகள் தம்பாட்டில் கடலில் பயணிக்க முற்பட்டால் விளைவு மோசமாக இருக்கும் என்று அரசுத் தரப்பு எச்சரித்திருக்கின்றது.

ஆனால், இது விடயத்தில் எந்த விளைவுகளையும் எதிர் கொள்ளத் தயார் எனப் புலிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் -

இந்த விடயத்தை சமாளித்துத் தீர்வு காணும் வகையில் தனியார் ஹெலிக்கொப்டர் ஒன்றின் மூலம் புலிகளின் தளபதிகளுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்து கொடுப்பது குறித்து அனுசரணைத் தரப்பான நோர்வேயால் முயற்சி எடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கு அரசு நேரடியாக எதிர்ப்புக்காட்டாவிட்டாலும் அரச உயர் மட்டத்திலிருந்து வந்ததாகக் கருதப்படும் அழுத்தங்களின் அடிப்படையில், மேற்படி ஹெலி வசதியை வழங்க முன்வந்த தனியார் நிறுவனம் பின்னர் கையை விரித்துவிட்டது என்றும் கூறப்படுகின்றது.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்கு இருதரப்பும் இணங்கும் ஓர் ஏற்பாட்டைச் செய்து கொடுப்பதில் சளையாமல் முயற்சிக்கின்றது கண்காணிப்புக் குழு.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து தரை வழியாகக் கிளிநொச்சி சென்று, அங்கு புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனைச் சந்தித்துப் பேசினார். இன்று அவர் மீண்டும் இங்கு திரும்பிச் சென்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச விருக்கின்றார்.

அப்போது, புலிகளின் கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக் குறித்து திட்டவட்டமான முடிவு ஏதும் வெளியிடப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)





சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் உள்ள வீட்டினுள் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட குடும்பஸ்தரை முதல் படத்திலும் - ஊர்காவற்றுறையில் நேற்றுக்காலை சூட்டுக்காயத்துடன் மீட்கப்பட்ட இளைஞரின் சடலத்தை அடுத்த படத்திலும் காணலாம். (படங்கள்:பிரபா)

## ஊர்காவற்றுறையில் சூட்டுக்காயத்துடன் இளைஞன் சடலம்மீட்பு!

ஊர்காவற்றுறை,ஏப்.13

ஊர்காவற்றுறை பருத்தியடைப்புப் பகுதியில் இளைஞன் ஒருவனின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

மினிபஸ் சாரதியாகப் பணியாற்றிவந்தவரான தம்பு கோபாலசிங்கம் (வயது 26) என்பவரின் சடலமே அவரது வீட்டில், தலைப் பகுதி துணியால் மூடிக்கட்டி கைகள் பின்புறமாகப் பிணைக்கப்பட்ட நிலையில் கிடந்தது.

இவர் தாயாருடன் வசித்துவந்தார். நேற்று முன்தினம் இரவு தாயார் சற்றுத் தொலைவிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். காலையில் அவர் வீட்டிற்குத் திரும்பியபோது மகன் இறந்து கிடப்பதைக் கண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஒ-7-14-16) (33)



புத்தாண்டை முன்னிட்டு புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதற்காக நேற்றையதினம் யாழ். நகருக்கு வந்திருந்த பொதுமக்களில் ஒரு தொகுதியினரைப் படங்களில் காணலாம். (படங்கள்: ஒளிஅதிரன்)

## யாழ். நகரில் புத்தாண்டு வியாபாரம் மாலை வேளைகளில் சன நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். நகரில் புத்தாண்டு வியாபாரம் களைகட்டத் தொடங்கிவிட்டது. இதனால், மாலை வேளைகளில் நகரப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

புத்தாண்டை முன்னிட்டு மக்கள் புத்தாடைகளைக் கொள்வனவு செய்வதற்கென குடாநாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் யாழ். நகரப் பகுதிக்கு படையெடுக்கத் தொடங்கிவிட்டனர்.

குறிப்பாக மாலை வேளைகளில் சனக் கூட்டம் நிரம்பி வழிவதையடுத்து நகரப் பகுதி போக்குவரத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

முனீஸ்வரன் வீதியில் நடைபாதை வியாபாரிகள் தமது கடைகளை அமைத்திருப்பதையடுத்து அப்பகுதியில் பெரும் சன நெரிசல் நிலவுகிறது.

அத்துடன், உணவகங்கள், குளிர்பான நிலையங்கள், அங்காடி விற்பனை நிலையங்கள் என்பவற்றிலும் -

போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் மினிபஸ்கள் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

(எ-7)(33)

## சீருடையினர் தாக்கியதில் பல்கலை. மாணவன் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்றுமாலை பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாக வைத்து சீருடையினரால் பலமாகத் தாக்கப்பட்டார் எனக் கூறப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாக - பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் உணவருந்திக்கொண்டிருந்த சமயமே சம்பந்தப்பட்ட மாணவர் சீருடையினரால் தாக்கப்பட்டார் என்று பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில்:-

பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள உணவகத்தினுள் அத்துமீறி நுழைந்த இராணுவத்தினர் அங்கு உணவருந்திக்கொண்டிருந்த பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்கள் மீது மிலேச்சத்தனமாகவும், கொடூரமாகவும் தாக்கி காயப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மாணவர்களைச் சீண்டி அவர்களை ஆத்திரமடைய வைத்து வன்செயல்களை உருவாக்கவே இராணுவம் முயலுகின்றது என்பதற்கு இது ஒரு உதாரணம். இந்நிலை தொடர்ந்தால், எதிர்வரும் காலங்களில் நெருக்கடியான - பதட்டமான சூழலே உருவாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இராணுவத்தினரின் திட்டமிட்ட இந்தச் செயற்பாட்டை குடாநாட்டு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முடக்குவதற்கான செயலாகவே நாம் கருதுகின்றோம்.

அத்துடன், கண்டனப் போராட்டங்களை நடத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும் என்பதையும் இத்தால் தெரியப்படுத்துகின்றோம் - என்றுள்ளது.

இதற்கிடையில் - கையிலும், தலையிலும் காயமடைந்த குறிப்பிட்ட மாணவன் நேற்றிரவு யாழ். மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-7-14)(33)

## அமைதி முயற்சிகளில் அரசுக்கு தொடர்ந்தும் பெரும் ஆர்வமாம்

கொழும்பு, ஏப். 13

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்தாலும் அமைதிப் பேச்சுகளில் அரசு வெகுவான அக்கறையுடன் இருப்பதாகவும், அடுத்தகட்ட அமைதிப் பேச்சுகள் திட்டமிட்டபடி நடைபெறுமென்று எதிர்பார்ப்பதாகவும் அரசு நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

நேற்றுப் பிற்பகல் முப்படைகள் மற்றும் பொலீஸ் திணைக்களத்தின் பேச்சாளர்கள் சகிதம் கொழும்பில் அரச தகவல் திணைக்களத்தில் செய்தியாளர்களை சந்தித்த திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, விடுதலைப் புலிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :-

விடுதலைப் புலிகள் கடந்த சில நாள்களாக ஆத்திரமூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தாலும் அரசு இன்னமும் பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறது. ஜெனீவாவில் காணப்பட்ட உடன்பாடுகளை மீறும் வகையிலேயே புலிகள் செயற்படுகின்றனர்.





கடும்போக்காளர்களின் அழுத்தத்திற்கு மத்தியில் ஜனாதிபதி உயர்மட்ட விட்டுக் கொடுப்புகளுடன் சமாதானத்துக்காகச் செயற்பட்டு வரும்போது புலிகளும் பொறுமையுடன் செயற்படவேண்டும். பேச்சுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவே அரசு விரும்புகிறது.

- இவ்வாறு [illegible] (ஏ-க)

## செல்லத்துரை சுவாமிகள் சமாதியடைந்தார்



யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுவாமிகள் (வயது 92) நேற்றுமாலை 6.30 மணியளவில் சமாதியடைந்தார்.

அருணாசலம் செல்லத்துரை என்ற இயற்பெயரையுடைய சுவாமிகள், யோகர் சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர். செங்கலடி மற்றும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையங்களில் தவவாழ்வு வாழ்ந்துவந்த சுவாமிகள் ஆன்மீக சிந்தனைகளையும், தூய வாழ்வு வாழவேண்டியதன் அவசியம் குறித்தும், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளின் போதனைகள் தொடர்பாகவும் நற்சிந்தனைகளை எடுத்துக் கூறிவந்தவர்.

செல்லத்துரை சுவாமிகளின் திருமேனிக்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விசேட அபிஷேகம், ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து திருமேனி ஓமாக்கினி இடுவதற்காக வண்ணை. கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

### நல்லை ஆதீனம் அனுதாபம்

செல்லத்துரை சுவாமிகள் சமாதியடைந்தமை குறித்து நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் அனுதாபச் செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமைதியும் சாந்தமும் உடையவராய் சமய போதனைகளை எடுத்துக்கூறுவதில் வல்லவரான செல்லத்துரை சுவாமிகள் சமாதியடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம் என அந்த அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)(33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## வினை விதைத்ததால் விபரீத விளைவுகள்

யுத்தநிறுத்த இணக்கம் மீண்டும் சிக்கலுக்கு உள்ளாகும் மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. கொடூர யுத்தம் எப்போதும் வெடிக்கலாம் என்ற ஆபத்துக் கட்டத்தில் இலங்கைத்தீவு சிக்குண்டிருக்கின்றது.

ஒட்டுப்படைகளின் கட்டுப்பாடற்ற வன்முறைகளும், அரச படைகளின் கெடுபிடிகளும், அரச படைகளுக்கு எதிராகக் களத்தில் நிகழும் கிளைமோர்த் தாக்குதல்களும் திரும்பவும் நாட்டை கடந்த டிசம்பரில் நிலவிய மோசமான கட்டத்துக்குக் கொண்டு சென்றிருக்கின்றன.

இப்போதைய வன்முறைகள் தொடர்பாக - இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளுக்குப் பொறுப்பான நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் - தமது பிந்திய அறிக்கையில் தெரிவித்திருக்கும் விடயம் ஒன்று முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

“இந்த (கிளைமோர்)தாக்குதல்களை, முக்கிய தமிழ் சிவில் சமூகத் தலைவரான வ.விக்னேஸ்வரன் படுகொலை உட்பட அண்மைய நாட்களில் நிகழ்ந்த வன்முறைகளின் பின்னணியில்தான் நோக்க வேண்டும்.”- என்று சுட்டிக்காட்டியிருக்கிறார் சொல்ஹெய்ம்.

இன்றைய மோசமான நிலைக்கு விக்னேஸ்வரன் படுகொலை போன்ற கொடூர வன்முறைகளே மூலகாரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அந்தப் படுகொலையால் பற்றிப் பிடித்த தீ, இப்போது கனன்று விளாசி எரிகின்றது.கிளைமோராக வெடிக்கின்றது. பதில் படுகொலைகளாக அரங்கேறுகின்றது.

கட்டுப்பாடு இல்லாமல் - கட்டுமட்டு இல்லாமல் - கொட்டமடிக்கும் ஒட்டுப்படைகளைக் கட்டிவைப்பதற்கு அரசு தவறியதால் ஏற்பட்ட வன்முறைகளுள் ஒன்றுதான் விக்னேஸ்வரன் படுகொலை என்பது ஊரறிந்த இரகசியம். விடுதலைப்புலிகளும் அதையே சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து அவற்றைத் தமிழர் தாயகப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவது என்றுஜெனீவாப் பேச்சில் ஒப்புக்கொண்ட இணக்கத்தை - யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொண்ட அதே அம்சத்தை - நடைமுறைப்படுத்த மறுத்து, ஒட்டுப்படைகளைத் தனது ஆசீர்வாதத்துடன் களமிறக்கிய அரசுத் தரப்பு, அந்த வினைக்கான விளைவுகளை - பெறுபேறுகளை - எதிர்கொள்ளவேண்டிய இக்கட்டில் இப்போது சிக்கியிருக்கின்றது.

முதல்சுற்று ஜெனீவாப்பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயத்தை - முழு அளவில் - சொல்லிலும் செயலிலும் - நடைமுறைப்படுத்தாவிட்டால் அடுத்த சுற்று அமைதிப்பேச்சுகளில் பங்குபற்றுவதில் அர்த்தமேயில்லை என்று விடுதலைப்புலிகள் திரும்பத் திரும்பக் கூறிவந்தனர்.

அப்படியிருந்தும் ஜெனீவாப் பேச்சு இணக்கத்தை செயற்படுத்தாமல் - செயற்படுத்த விரும்பாமல் - இழுத்தடித்து வந்தது இலங்கை அரசு. அதனாலும், அதன் விளைவாகக் களத்தில் தொடராக நிகழ்ந்த - நிகழ்ந்து வருகின்ற - வன்முறைச் சம்பவங்களினாலும் அடுத்த சுற்று அமைதிப்பேச்சு திட்டமிட்டபடி நடைபெறுமா என்பது கேள்விக் குறியாகியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளும் போராளிகளும் கிழக்கிலிருந்து வன்னிக்கு வந்து செல்வதற்கு கெடுபிடியற்ற உரிய வசதிகளை வழங்க அரசு மறுத்து வருகிறது எனப் புலிகள் குற்றம் சுமத்துகின்றார்கள். அந்நிலைமை நீடித்தால் எந்தக் கணத்திலும் புலிகள் தமக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாமே செய்துகொண்டு க்டல்வழியாகத் தமது பயணத்தை முன்னெடுப்பர் என்றும் புலிகள் எச்சரித்திருக்கின்றனர்.

ஆனால், அத்தகைய செயற்பாட்டுக்கு அரசு அனுமதிக்காது என அரசுத் தரப்பிலும் திட்டவட்டமாக - உறுதியாக - பதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

அப்படியானால் -

கடலில் ஒரு நேரடி உரசலுக்கு - மோதலுக்கு - களம் தயாராகின்றது என்றுதான் அர்த்தம்.

அதுவும் -

இப்பத்தியில் நாம் முன்னரே சுட்டிக்காட்டியமை போன்று, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள 14 நாள் முன்னறிவித்தல் வழங்கப்படாமலேயே யுத்தம் ஒன்று மீள வெடிப்பதற்கான முதல் உரசலுக்கு ஒரு வாய்ப்பு - ஒரு சந்தர்ப்பம் - கடலில் கருக்கட்டி வருகின்றது என்பதுதான் நிலைமை.

ஆயுதப் போராட்டம் மூலம் தமது உரிமைகளை வென்றெடுக்கும் முனைப்பில் தீவிரமாக உள்ள ஒரு சக்தியுடன், அமைதி வழித் தீர்வுக்கும் தாங்கள் முயற்சிக்கின்றார்கள் என்ற அடிப்படையை மறந்து, மெத்தனப்போக்கில் - மிதப்பில் - அரசுத்தலைமை நடந்துகொள்ளுமாயின் நிலைமை மோசமாவதைத் தவிர்க்க முடியாமல் தான்போகும்.

# காங்கேசன்துறை சென்று எரிபொருள்கள் ஏற்றிவர கூட்டுத்தாபன ஊழியர் பின்னடிப்பு

## இராணுவ வாகனத்தில் செல்லும் நடைமுறையால் அச்சம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சியத்தில் இருந்து குடாநாட்டுக்கு எரிபொருளை விநியோகிக்கும் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எரிபொருள் வகைகளை ஏற்றிவருவதற்காக இந்தக் களஞ்சியத்துக்குச் சென்று வரும் ஊழியர்கள் அச்சம் காரணமாக நேற்றுமுதல் தங்கள் பணியை நிறுத்திக் கொண்டதை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

பணியாளர்கள் சுமார் 26 பேர் தினமும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வாகனத்தில் தாமாகவே காங்கேசன்துறைக் களஞ்சியத்துக்குச் சென்று பௌசர்களில் எரிபொருளை ஏற்றிவந்தனர். ஆனால், கடந்த சில தினங்களாக அவர்கள் சொந்த வாகனத்தில் செல்வதை படையினர் அனுமதிக்கவில்லை. தெல்லிப்பழையில் அமைந்துள்ள சோதனை நிலையத்தில் இருந்து இராணுவ வாகனத்திலேயே ஊழியர்களைக் களஞ்சியத்துக்கு அழைத்துச் செல்ல படையினர் ஏற்பாடு செய்துள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்தினுள் படையினரின் வாகனத்தில் பயணிப்பது தொடர்பாக ஊழியர்கள் அச்சமடைந்துள்ளனர். தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று அவர்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் முறையிட்டிருக்கின்றனர். அத்துடன், எரிபொருள் ஏற்றிவரச் செல்லும் பணியை நேற்றுடன் அவர்கள் இடைநிறுத்திவிட்டனர். இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் ஸ்தம்பிதமடைந்துள்ளது

ஊழியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புத் தொடர்பாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதும் அவர்களிடம் இருந்து உடனடியாகக் கருத்து எதனையும் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. (ஐ-13)

## நடிகர் ராஜ்குமார் காலமானார்



பெங்களூர்,ஏப்.13

கன்னட திரையுலகின் மூத்த நடிகர் ராஜ்குமார் தனது 77 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். தமிழகத்தில் உள்ள தொட்டகாஜனூரில் பிறந்த இவர் 1950 ஆம் ஆண்டு ‘பேடர் கண்ணப்பா' என்ற கன்னடத் திரைப் படத்தின் மூலம் அறிமுகமானார்.

இருநூறுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்த இவர் நடிப்பிலிருந்து ஓய்வுபெற்று திரைப்படத் தயாரிப்பாளரானார். இவர் சிறந்த பாடகராகவும் விளங்கினார்.

தமிழகத்துக்கும் கர்நாடகாவுக்குமிடையிலான காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் தமிழகத்துக்கு எதிராக இவர் கருத்துத் தெரிவித்திருந்தார் பின்னர். சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டு பணயக் கைதியாக வைக்கப்பட்டார். தமிழ்ப் பத்திரிகையாளர் நக்கீரன்கோபால், வீரப்பனிடம் தூது சென்று ராஜ் குமாரை மீட்டார். (ஒ)

## கஞ்சா கடத்திய கோப்ரல் கைது!

கொழும்பு,ஏப்.13

இராணுவத்தினருக்குச் சொந்தமான 'கப்' ரக வாகனத்தில் 18 கிலோ கஞ்சாவை கடத்திய சம்பவம் தொடர்பாக இராணுவ கோப்ரல் ஒருவரை கிரியெல்ல பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

'கப்'ரக வாகனத்தில் இராணுவச் சீருடை அணிந்த ஒருவர் வீதி ஒழுங்கு விதிகளை மீறி வாகனத்தை ஓட்டிச் செல்கிறார் என கிரியெல்ல பொலீஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வீதித் தடைகளை ஏற்படுத்திய பொலீஸார், கோப்ரலை கைதுசெய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கஞ்சாவை தனமல்விலவிலிருந்து கொழும்பிற்கு கடத்த முயற்சித்தபோதே இந்தக் கோப்ரல் கைது செய்யப்பட்டார் என்றும், இவர் முன்னர் பல தடவைகளும் இவ்வாறு செயற்பட்டுள்ளார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக கிரியெல்ல பொலீஸார் தெரிவித்துள்ளனர். (க)

## நெடுந்தீவில் நோயாளருக்கென அம்புலன்ஸ் படகுச் சேவை ஆரம்பம்

கியூமெடிக்கா நிறுவனத்தால் நெடுந்தீவு மக்களுக்காக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் படகு நேற்று முன்தினம் சேவையில் வைபவ ரீதியாக ஈடுபடுத்தப்பட்டது.

அவசர நோயாளர்களை ஏற்றி இறக்குவதற்காக இப்படகு வழங்கப்பட்டது. யாழ்அரச அதிபர் கே.கணேஷ் நாடாவை வெட்டிப் படகுச் சேவையை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து நிகழ்வுகள் பயணிகள் மண்டபத்தில் இடம்பெற்றது.

போதகர் பன்னீர்ச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கியூமெடிக்கா நிறுவன இலங்கை இணைப்பாளர் சாம் இராஜசூரியர், யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து யாழ்.அரச அதிபரும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் நெடுந்தீவு வைத்திய சாலை, துறைமுகம் என்பவற்றை நேரில் சென்று பார்வையிட்டனர்.

வைத்தியசாலையின் அடிப்படை வசதிகளை ஆராய்ந்த அவர்கள் தேவைகளை முடிந்தளவிற்கு ஏற்படுத்தித் தருவதாக அப்போது அரச அதிபருக்குத் தெரிவித்தனர்.

துறைமுகப் புனரமைப்புக் குறித்தும் அவர் அவதானித்தார். (ஒ-111-202)

## நாளை

சித்திரை 01
வெள்ளிக்கிழமை
14.04.2006
திதி: பிரதமை
முன்னிரவு : 11.31 வரை
நட்சத்திரம் : சித்திரை
முற்பகல் : 11.50 வரை
தமிழ் - சிங்கள புதுவருடம்
சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம் : 10.35 - 12.05
(யாவும் பழைய நேரப்படி)

## உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியமர விரும்புவோருக்கு

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் மீளக் குடியமர விரும்புபவர்கள் பதிவை மேற்கொள்ளுமாறு வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று பிரதேச செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உடுவில் பிரதேச செயலக பிரிவு எல்லைக்குள் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து.நலன்புரி நிலையங்களிலும், உறவினர் அல்லது நண்பர்கள் வீடுகளிலும் வசிப்பவர்களில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியமர விரும்புபவர்கள் தாங்கள் வசிக்கும் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராம அலுவலர்களிடம் தங்கள் பதிவை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். - என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## உதயவாக்கு

*சுயமரியாதை, சுய அறிவு, சுய கட்டுப்பாடு இவை மூன்றும் வாழ்க்கையை அதி உன்னத நிலைக்குக் கொண்டுபோய்விடும். - டென்ஸிசன்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**LIONS CLUBS INTERNATIONAL**
DISTRICT 306 B I - SRI LANKA
We Serve

The President & Members of
THE LIONS CLUB OF NEGOMBO
Cordially invite
ALL LIONS Dist 306 B I
for the
SPECIAL DINNER MEETING
on
SATURDAY 15th APRIL, 2006
At the
MULTI PURPOSE COOPERATIVE SOCIETY HALL
(M.P.C.S. Hall)
Main Street, Jaffna
at 5.30 p.m.
to announce the candidature of our member
**LION NIMAL RAJAPAKSE MJF**
for the office of
VICE DISTRICT GOVERNOR
for the fiscal year 2006/2007
Chief Guest
District Governor, District 306 B I
Lion Sarath Gunasekara MJF JP & Lady Anne MJF
(C/48925) (24)

**Guest of Honour**
**Vice District Governor District 306 B I**
**Lion Lalith Fernando & Lion Lady Nimali**

**Jaffna College Institute of Technology**
Vaddukkoddai, Srilanka

The following courses will commence
from 24th April 2006.
Duration: 3-4 months

1. Computer Certificate Courses in Business Applications
   - MS Word
   - MS Excel
   - MS Acces
   - &
   - Power Point
2. Certificate Course in Printing Technology
   - Adobe PageMaker
   - Adobe PhotoShop
   - CorelDraw
3. Certificate Course in Computer Hardware
4. Certificate Course in Macromedia Flash
5. Certificate Course in Maya

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:
**Director,**
**Jaffna College Institute of Techno..gy,**
**Vaddukkoddai.**
T.Phone : 0602213139, 0212228275 Email:- jcit@sltnet.lk
(C/48755)(32)

## கண்ணீர் அஞ்சலி



*யாழ்.பல்கலைக்கழக*
*சித்த மருத்துவத் துறையின்*
*சிரேஷ்டவிரிவுரையாளர் டாக்டர்*
*திருமதி சிவரஞ்சினி சிவபாலன்*
*அவர்களின் அன்புத் தாய்*
*திருமதி* **புனிதவதி விநாயகமூர்த்தி**
*அவர்கள் (10.04.2006) திங்கட்கிழமை கால மானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(49383)(32-15-45)

## மரண அறிவித்தல்

## கோபாலு தங்கமுத்து

நெடுந்தீவு கிழக்கு, 15ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலு தங்கமுத்து அவர்கள் 11.04.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர் கோபாலுவின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி (கணக்காளர் ப.நோ.கூ.ச. நெடுந்தீவு), சண்முகலிங்கம் (கிராம அலுவலர்-நெடுந்தீவு), சர்வேஸ்வரி, குகனேஸ்வரி (ஆசிரியை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி), நடேசலிங்கம் (கமலி ஸ்ரோர்ஸ், குருநகர்), கணேசலிங்கம் (மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவு), ரதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சிவனேசன், யோகதேவி, நடராசா (கிராம அலுவலர் நெடுந்தீவு மத்தி), இராசேந்திரன் (றொலெக்ஸ் இன்டஸ்ரீஸ் - யாழ்ப்பாணம்), நேசமலர், பிரியதர்சினி ஆகியோரின் மாமி யும், பிறேமஜா, மதுசா, தர்சன், கீர்த்தனன், கஜராஜ், கயானன், ரதணிகா, கீர்த்திகா, துசாரகா, கீர்த்தனன், கஜலக்சன், கஜறூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுந்தீவு கிழக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*15 ஆம் வட்டாரம்,*
**நெடுந்தீவு.** (49410)(21-32-15-45)

தகவல்:
**கோ.சண்முகலிங்கம்** (மகன்).

# பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

மல்லாவி,ஏப்.13

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மல்லாவி மத்திய கல்லூரி அணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாமிடத்தை பாலிநகர் மகாவித்தியாலய அணியும் மூன்றாமிடத்தை மாங்குளம் மகாவித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் மாங்குளம் மகாவித்தியாலய அணி மட்டுமே போட்டிக்கு சமுகமளித்திருந்தமையால் மாகாண மட்டப் போட்டிக்கு அந்த அணி மட்டுமே தெரிவாகியது. (ஒ-322-203)(32)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.13

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும் கலையகம் சனசமூக நிலையமும் இணைந்து அமரர் சி.அரியகுட்டி நினைவுக் கிண்ணத்துக்காக மாவட்ட ரீதியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் விவரங்கள் வருமாறு:-

**இன்று**

★ பிற்பகல் 4 மணிக்கு - விக்னேஸ்வரா வி.க. எதிர் பாரதி வி.க.

★ பிற்பகல் 4.45 மணிக்கு - மத்திய வி.க. (ஏ) அணி எதிர் விக்னேஸ்வரா வி.க. (பி) அணி.

**நாளை**

★ பிற்பகல் 4 மணிக்கு - அரியாலை ஐக்கிய வி.க. எதிர் அண்ணா வி.க.

★ பிற்பகல் 4.45 மணிக்கு - காங்கேசன் துறை ஐக்கிய வி.க. எதிர் இந்து இளைஞர் வி.க. (190)(32)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'ரெக்கி' வெற்றிக்கிண்ணத்திற்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இன்றும் நாளையும் யாழ்.பல்கலைக்கழகம்-யாழ்.மத்திய கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**இன்று**

★ யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் - காலை 9.30 மணிக்கு- அரியாலை மத்திய வி.க. எதிர் ஒல்கோல்ஸ் வி.க.

★ யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில்- காலை 9.30 மணிக்கு - சென்றலைட்ஸ் வி.க. எதிர் மானிப்பாய் பரீஸ் வி.க.

**நாளை**

★ யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில்- காலை 9.30 மணிக்கு - பற்றீசியன்ஸ் வி.க. எதிர் ஒல்கோல்ஸ் வி.க.

★ யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில்- காலை 9.30 மணிக்கு- ஜொனியன்ஸ் வி.க. எதிர் யாழ்.பல்கலைக்கழக வி.க.

(ஒ-190)(32)

## தவறிவிட்டது

கடந்த வாரம் திருநெல்வேலிக்கும் ஆவரங்காலுக்கும் இடையே கணேசலிங்கம் என்பவரது NPGQ 2258 இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் 'பதிவுப் புத்தகம்' வாகன அனுமதிப் பத்திரம் 'காப்புறுதிப் பத்திரம்' என்பன கைதவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு: **வே.கணேசலிங்கம்** (சி/48930) (21-32-15-45)
ஆசிரியர்,
ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்,
புத்தூர். 0777109638

## புதிய பிரிவுகள்

பிரிவு I :14.04.2006
பிரிவு II :15.04.2006
பகல் 10.00 மணி

அனைத்து Diploma
கற்கை நெறிகளுக்குமான வார,
வாரஇறுதிநாள் பிரிவுகள்
ஆரம்பமாக உள்ளன என்பதை
அறியத்தருகின்றோம்.

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

## கார் வாடகைக்கு

திருமண வைபவங்களுக்குரிய நவீன கார் வாடகைக்குண்டு. மற்றும் இதர தேவைகளுக்கும் Full Option குளிருட்டப்பட்டது (அரைச்சலார்).



தொடர்பு: T.P.: 0779793310
7/1, நந்தாவில் லேன், கோக்குவில் கிழக்கு, கோக்குவில்.
(49418) (24-32-155-45)

## பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினால் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் புதுவருட தினத்தன்று (14.04.2006) நடத்த இருந்த ராகம்ஸ் இசைக்குழுவின் இனிய பொன்மாலைப்பொழுது தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி நடைபெறும் திகதி பின்னர் பத்திரிகையில் அறிவிக்கப்படும். சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

(49414)(32-15-45) **லயன்ஸ் கழகம், மானிப்பாய் வட்டம்.**

## எங்கள் இதயத்தின் விம்மல்கள்





கியூடெக்-கரித்தாஸ் பணியாளர்களான
**கந்தபத்மநாபன் சண்முகரட்ணம்**
(சிறுவர் திட்ட முகாமை...)
**செல்வேந்திரா பிரதீப்குமார்**
(சமூக பங்கு செயற்பாட்டு அலுவலர்)

*அகால மரணம்: 10.04.2006*

இவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

மயிலிட்டித்துறை க.கூ.சங்கம்,
எரிஞ்சம்மன் கோயிலடி, பருத்தித்துறை.
(49421)(32-45-15)

## துயர் பகிர்கின்றோம்



கியூடெக் நிறுவனப்
பணியாளர்களான
சண்முகரெட்ணம் கந்தபத்மநாபன்
செல்வேந்திரா பிரதீப்குமார்
ஆகியோர்
அகாலமரணமடைந்த
செய்தி கேட்டு
அதிர்ச்சியடைந்தோம். இவர்களது
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
கியூடெக் நிறுவனத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன்,
இவர்களின் ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



சுகவாழ்வு நிலையம்,
இல.16, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(49421)(32-15-45)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

771 நீலம்

தனுசு

11-04-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4204068 - 4217878

வெற்றி இலக்கங்கள் **10 18 31 35**

ஜக்பொட் பரிசு ரூபா **10,00,000/-** வெல்லப்பட்டுள்ளது

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 77,36,180/-
தொடர் இல. 4217879 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,01,955 | 10/- | 30,19,550/- |
| 2 இலக்கங்கள் | 27,736 | 20/- | 5,54,720/- |
| 1 இல+லக்கினம் | 27,462 | 30/- | 8,23,860/- |
| 2 இல+லக்கினம் | 2,548 | 100/- | 2,54,800/- |
| 3 இலக்கங்கள் | 742 | 500/- | 3,71,000/- |
| 3 இல+லக்கினம் | 72 | 5,000/- | 3,60,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 5 | | 66,83,930/- |
| முச்சக்கர வண்டிகள் | | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,60,524 | | 77,36,180/- |

அடுத்த செவ்வாய்க்கிழமை ரூபா **10,00,000/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 4213600-2-00 |
| கொழும்பு | 4216223-5-21 |
| களுத்துறை | 4208487-6-97 |
| பொலன்னறுவை | 4204615-3-85 |
| கம்பஹா | 4204476-3-67 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேசசபைஅலுவலகம் சக்காவோடையில் சனியன்று திறப்பு

காரைநகர்,ஏப்.13

புதிதாக உருவாக்கப்பட்ட காரைநகர் பிரதேச சபையின் திறப்புவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு காரைநகர் சக்கலாவோடையில் உள்ள கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதேச சபையின் செயற்பாடுகளை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார். சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி ஆணையாளர் பி.சிவலிங்கம், ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேசங்களுக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறை பிரதேச சபையுடன் இணைந்திருந்த காரைநகர் பிரதேசத்தை தனியான பிரதேச சபையாக பிரகடனப்படுத்தப்பட்டு சித்திரை மாதம் 15 ஆம் திகதி முதல் செயற்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அண்மையில் காரைநகர் தனியான உதவி அரச அதிபர் பிரிவாக பிரகடனப்படுத்தப்பட்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-73)(39)

# தவக் காலத்தின் புனித வாரத்தில் யாழ்.பேராலயத்தில் விசேட சடங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.13

கிறிஸ்தவர்களால் அனுஷ்டிக்கப்படும் தவக்காலத்தின் இறுதி வாரமாகிய புனித வாரத்தின் புனித சடங்குகள் யாழ்.பேராலயத்திலும் நிறைவேற்றப்படவுள்ளன.

அந்த வகையில் இன்று வியாழக்கிழமை (புனித வியாழன்) மாலை 6 மணிக்கு இறுதி இராவுணவு ஞாபகார்த்தத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறவுள்ளது. இரவு 10 மணி தொடக்கம் 11 மணி வரை பொது நற்கருணை ஆராதனை இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை (புனித வெள்ளி) காலை 6.30 மணிக்கு திருச்சிலுவைப் பாதை, தியானம் என்பன பேராலய திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளன. மாலை 5 மணிக்கு திருச்சிலுவைஆராதனையும் ஆயர் தலைமையில் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இயேசு திருச்சிலுவையில் மொழிந்த வாக்கியங்களின் தியானமும் இரவு 11 மணிக்கு பாஸ்காத் திருவிழிப்பு ஆராதனையும் திருப்பலியும் ஆயர் தலைமையில் இடம்பெறும்.

உயிர்ப்பு ஞாயிறான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு இரண்டாம் திருப்பலி ஆயர் தலைமையிலும் காலை 8.30 மணிக்கு மூன்றாவது திருப்பலியும் இடம்பெறும் அன்றைய தினம் மாலையில் யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி நடைபெறமாட்டாது என பேராலயப் பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இவ்வாரத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் அனைத்து ஆலயங்களிலும் புனிதவாரச் சடங்குகள் நடைபெறும். (ஒ-202)

வாழைச்சேனை பொதுச்சந்தைப் பகுதியில் —

# கருணாகுழு அச்சுறுத்திப் பறக்கவிட்ட கொடிகளை இராணுவம் அகற்றியதாம்!

கொழும்பு,ஏப்.13

வர்த்தக நிலையங்கள் தோறும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுமாறு கருணா குழுவினர் எனத் தெரிவிக்கப்படுவோர் வர்த்தகர்களை அச்சுறுத்தி கொடிகளை பறக்கவிட்டனர். பின்னர் அங்கு வந்த படைத்தரப்பினர் அந்தக் கொடிகளை அகற்றவேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான தர்மசங்கடமான அனுபவம் வாழைச்சேனை பொதுச்சந்தையிலுள்ள வர்த்தகர்ளுக்கு ஏற்பட்டது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித் தன.

கடந்த திங்கட்கிழமை இராணுவப் பாதுகாப்புடன் வந்த கருணா குழுவினர் எனத் தெரிவிக்கப்படுவோர் வெருகலில் இரண்டு வருடங்களுக்கு முன்பு உயிரிழந்த தமது போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறு வர்த்தகர்களை அச்சுறுத்தியுள்ளனர். எனினும், நேற்று முன்தினம் வந்த படையினர் மேற்படி கொடிகளை அகற்றுமாறு வர்த்தகர்களை எச்சரித்ததோடு அந்தக் கொடிகளைப் பலவந்தமாகவும் அறுத்தெறிந்துள்ளனர் - எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# தொடர்ந்தும் உதவி, ஒத்தாசை இணைத்தலைமை வழங்குமாம்!

கொழும்பு,ஏப்.13

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கும் இலங்கை சமாதானத்தை முன்னெடுப்பதற்கும் தொடர்ந்தும் உதவியும் ஒத்தாசையும் வழங்கவுள்ளதாக இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இணைத் தலைமைகளின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பில் கொழும்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி ஜூலியஸ் வில்சன் இத் தகவலைத் தெரிவித்தார்.

தற்போது நிலவும் சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு விடுதலைப் புலிகள் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சில் கலந்துகொள்வர் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (க)

# மாமனிதர் விக்கியின் கொலையுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கைதானார்

## பொலீஸ்மா அதிபர் தகவல்

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் மாமனிதர் விக்னேஸ்வரனின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார் எனப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலை சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இரண்டு விசேட பொலீஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன எனவும், இந்தக் குழுவினர் விசாரணையை ஆரம்பித்திருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

படுகொலைச் சம்பவத்தை நேரடியாகக் கண்டவரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன எனச் சுட்டிக்காட்டிய பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார் எனவும் கூறினார்.

இதேவேளை, இச் சம்பவம் தொடர்பாக சம்பவம் நடந்த தினத்தன்று வங்கிக்கு வந்த பெண்ணொருவரின் ஓட்டோச் சாரதி துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபரை நன்கு அவதானித்தார் எனவும், அந்த ஓட்டோச் சாரதியின் உதவியுடன் சந்தேகநபரின் படம் வரையப்பட்டுவ[illegible] தகவல் வெளியி[illegible] (க)

# புது வருஷப் பிறப்பு கருமங்கள்

## திருக்கணித பஞ்சாங்கப்படி (பழையநேரம்)

14.04.2006 சித்திரை மாதம் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.49 மணிக்கு 'விய' என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது.

| | | |
|---|---|---|
| இலக்கினம் | - | மேடம் |
| நட்சத்திரம் | - | சித்திரை 4ஆம் பாதம் |
| திதி | - | அபரபட்ச பிரதமை |
| புண்ணியகாலம் | - | 13ஆம் திகதி வியாழக்கிழமை பின்னிரவு 2.49 மணி தொடக்கம் வெள்ளிக்கிழமை பகல் 10.49 மணிவரை |
| கைவிசேஷம் | - | 14.04.2006 வெள்ளிக்கிழமை காலை 6.54 மணி முதல் காலை 8.10 மணிவரை காலை 8.34 மணிமுதல் பகல் 10.10 மணிவரை |

| | | | |
|---|---|---|---|
| புத ராகு | வ சூ | | செவ் |
| சுக் யுரே | புதுவருஷ ஜாதகம் | | சனி |
| நெப் | | | |
| | | சந் குரு | கே |

**இலங்கையின் பலாபலன்கள்:** வருஷம் பிறக்கும்போது உதய இலக்கினம் மேடமாக அமைகிறது. இலக்கினத்தில் சூரியன் உச்சம் பெறுவது அரசியல் நடவடிக்கைகளுக்கு சிறப்பானதாகும். ஆயினும் சனி இலக்கினத்தை நோக்குவதால் பலவித எதிர்ப்புக்களையும் சிரமங்களையும் தொல்லைகளையும் சமாளிக்க வேண்டி ஏற்படும். இலங்கையின் இலக்கினமான கும்பத்துக்கு 9இல் குருவும் 6இல் சனியும் சஞ்சரிப்பதால் அரசுக்கு எதிர்ப்புக்களைச் சமாளிக்கின்ற திறமையையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும்.

தமிழர்களின் இலக்கினமான மேடத்துக்கு குருபார்வை இருப்பதும் இலக்கினாதிபதி 3இல் சஞ்சரிப்பதும் நிம்மதியைக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையாகும். எனினும் சனி மேடத்தை நோக்குவதால் இடையிடையே அமைதிக் குறைவுகளையும் ஏற்படுத்தும். அமைதிப் பேச்சுக்களுக்கு உகந்த காலமாக அமைகிறது. மக்களுக்கு ஓரளவு நிம்மதியைக் கொடுக்கக் கூடிய சூழ்நிலை எனலாம். - சி.சிதம்பரநாதக்குருக்கள்.

## வாக்கிய பஞ்சாங்கப்படி (பழையநேரம்)

சுபம்மிகு பார்த்திப வருஷம் பங்குனி மாதம் 30ஆம் நாள் (14.04.2006) வியாழக்கிழமை கிருஷ்ணபக்ஷ பிரதமை திதியில் சித்திரை நட்சத்திர மூன்றாம் பாதத்தில் மீன இலக்கினத்தில் பின்னிரவு (அதிகாலை) 04 மணி 31 நிமிஷத்தில் மங்களகரமான புதிய 'விய' வருஷம் பிறக்கின்றது.

அன்று பின்னிரவு 12 மணி 31 நிமிஷம் முதல் காலை 8 மணி 31 நிமிஷம் வரை விஷு புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில் யாவரும் மருத்துநீர் தேய்த்து சிரசில் வேப்பிலையும் காலில் கொன்றையிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெள்ளைப்பட்டு ஆடையாயினும் மஞ்சள் கரையமைந்த புதிய வெண்ணிற ஆடையாயினும் அணிந்து கண்ணாடி, தீபம், பூர்ணகும்பம் முதலான மங்கள பொருள்களை தரிசித்து இஷ்ட, குலதெய்வங்களை தரிசித்து சூரிய வழிபாடாற்றி இயன்றளவு தான தருமங்கள் செய்து பெற்றோர், குரு, பெரியோரை வணங்கி ஆசிபெற்று தத்தம் சமய நூல்களை பாராயணம் செய்து உறவினருடன் மகிழ்ந்து அறுசுவை உணவருந்தி புதுவருஷத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களை சிந்தித்து மங்களகரமாக வாழ்வீர்களாக.

| | |
|---|---|
| **கைவிசேடம்** | |
| சித்திரை | 1 ஆம் நாள் (14.04.2006) வெள்ளிக்கிழமை காலை 8.01 மணிமுதல் 9.52 மணிவரை இரவு 7.27 மணிமுதல் 8.13 மணிவரை |
| சித்திரை | 2ஆம் நாள் (15.04.2006) சனிக்கிழமை காலை 7.56 மணிமுதல் 9 மணிவரை |
| **பெரியோர், குரு. தரிசனம்** | |
| சித்திரை | 1ஆம் நாள் (14.04.2006) வெள்ளிக்கிழமை காலை 8.01 மணிமுதல் 9.52 மணிவரை |
| சித்திரை | 2ஆம் நாள் (15.04.2006) சனிக்கிழமை மாலை 4.04 மணிமுதல் 5.40 மணிவரை. |
| சித்திரை | 4ஆம் நாள் (17.04.2006) திங்கட்கிழமை காலை 9.15 மணிமுதல் 9.40 மணிவரை |
| **ஏர் மங்கலம், வயல் தோட்டச் செய்கை** | |
| சித்திரை | 7ஆம் நாள் (20.04.2006) வியாழக்கிழமை மாலை 5.56 மணிமுதல் 7.14 மணிவரை |
| சித்திரை | 20ஆம் நாள் (03.05.2006) புதன்கிழமை காலை 6.44 மணிமுதல் 8.43 மணிவரை |
| **வியாபாரம் ஆரம்பித்தல், புதுக் கணக்குப் பதிதல்** | |
| சித்திரை | 20ஆம் நாள் (03.05.2006) புதன்கிழமை காலை 6.45 மணிமுதல் 8.10 மணிவரை |
| சித்திரை | 21ஆம் நாள் (04.05.2006) வியாழக்கிழமை மாலை 5.01 மணிமுதல் 5.52 மணிவரை |

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்**

மிருகசீரிடம், சித்திரை, சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்கள் அவிட்டம், பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து தான, தரும வழிபாடுகள் செய்து சங்கிரம தோஷ நிவர்த்தி செய்க.

# கொழும்பு பல்கலை கலைப்பீடம் 24ஆம் திகதி மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஏப்.13

கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் - என கொழும்பு பல்கலைக் கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி கொழும்பு பல்கலைக் கழகத்தில் கலைப்பீட மாணவர்சங்க உறுப்பினர்களைத் தெரிவதில் இடம்பெற்ற முரண்பாடுகள் [illegible] மாணவர்களிடையே [illegible] இடம்பெற்றதில் 4 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

நிலைமை மோசமடையவே அங்கு கலகம் அடக்கும் பொலீஸார் வரவழைக்கப்பட்டு கண்ணீர் புகைக்குண்டுகளும் வீசப்பட்டன. இதனை அடுத்து மாணவர்களின் இந்த மோதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவங்களையடுத்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதுடன் கலைப்பீட மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே தற்போது துணைவேந்தர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் கணினிக் கருத்தரங்கு

**15.04.2006 சனிக்கிழமை**
**காலை 9.00 மாலை 2.00**

⇨ **Virus**
⇨ **Network Security**

ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக இக் கருத்தரங்கு அமைகின்றது.

கருத்துரை வழங்குபவர்:
லண்டனிலிருந்து வருகை தந்துள்ள
**Mr. S. Emilton**
*B.Sc (Hons)(Ceylon), M.Sc (Westminster)*

Latest Anti Virus Softwares, Study Packs
என்பன உள்ளடக்கிய CD இலவசமாக வழங்கப்படும்.

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

**பதிவிற்கு முந்துங்கள்!**


# கனடா வாழ் தமிழ் மக்கள் ஏமாற்றம்

ஒட்டாவா, ஏப். 13

பயங்கரவாத இயக்கப்பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்த்து புலிகளுக்குப் பயங்கரவாத முத்திரை குத்தியிருக்கும் கனேடிய அரசாங்கத்தின் செயல் கனடா வாழ் ஈழத் தமிழ் மக்களைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது மட்டுமல்ல,அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் தந்திருக்கிறது என்று டொரன்டோ மாநில வாழ் பிரபல வர்த்தகரும், ஜனவரியில் நடந்த கனேடியப் பொதுத் தேர்தலில் ஆளும் 'கன்சர்வேட்டிவ்' கட்சி சார்பில் போட்டியிட்டவருமான வின்சென்ற் வீரசுந்தரம் தெரிவிக்கிறார்.

''இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்குக் கனடா அரசு உதவவேண்டும் என்பதே கனேடிய மக்களின் விருப்பமாகும். ஆனால், இப்பொழுது புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாகக் கனடா முத்திரை குத்தியிருப்பதனால், இலங்கையில் வாழ்கின்ற தமது உடன் பிறப்புகளுக்குக் கிடைக்கும் உதவிகள் இனித் தடைப்பட்டுப் போய்வி டுமோ, அப்படியானால் அதன் தாக்கம் என்ன வாக இருக்கும் என்பதைத் தாம் அறிய முடியாதவர்களாக இங்குள்ள மக்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள்.'' - என்றும் அவர் கூறினார்.

''இங்கு வாழ்கின்ற தமிழர்கள் எல்லோரும் முதலில் தங்களை கனேடியக் குடிமகன் என்றே கருதுகிறார்கள். கனேடியச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்தே நடக்கிறார்கள். கடும் உழைப்பாளிகளான இவர்கள் ஒழுங்காக வரிகளையும் செலுத்தி நற்பிரஜைகளாக வாழ்கிறார்கள். குழந்தை குட்டிகளைப் பெற்று குடும்பத்தைப் பேணி வளர்க்கிறார்கள்.

''இலங்கையில் தமது உடன்பிறப்புகள் பலரையும் விட்டு விட்டுத்தான் புலம்பெயர்ந்து இங்குவந்து இவர்கள் குடியேறினார்கள். அங்கு வாழ்கின்ற தமது உடன் பிறப்புகள் சகல உரிமைகளும் பெற்று சமாதானமாக வாழவேண்டும் என்பதே இங்குள்ளவர்களின் வேணவாவாக இருக்கிறது.'' - என்றும் வீரசுந்தரம் தெரிவிக்கிறார்.

புலம்பெயர்ந்து வந்து இங்கு வாழ்கின்ற தமிழர்களை மிரட்டி தமது பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகப் புலிகள் நிதி திரட்டுகிறார்கள் என்று மனித உரிமைகள் காவல் மையம் என்ற அமைப்பு சமர்ப்பித்த அறிக்கையை அடுத்தே புலிகள் இயக்கத்துக்கு எதிரான இந்தப் பூரண தடையை கனேடிய அரசு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்த்துக் கொண்டது ஏன் என்பதைத் தமிழர்களுக்கு விளக்குமுகமாக விளம்பரப் பிரசார இயக்கமொன்றையும் கனேடிய அரசு ஆரம்பிக்கவிருக்கிறது.

பயங்கரவாத இயக்கப் பட்டியலில் புலிகளும் சேர்க்கப்பட்டிருப்பதால் இனி யாரும் அவர்களின் அல்லது அவர்களுக்கு ஆதரவானவர்களின் நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ, பங்குபற்றுவதோ சட்டவிரோதமான செயலாகக் கருதப்படும்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக நடைபெற வேண்டும். அதனைக் காண்பதற்கா 'வ இந்த நடவடிக்கை என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் பீட்டர் மைக்கே தெரிவித்திருக்கிறார்.


## மூன்றாண்டு நீங்கா நினைவலைகள்

அன்னை மடியில் 25 . 05 . 1933



குருநாதன் திருவடியில் 17 . 03 . 2003

**அமரர் வேலாயுதம் வீரகத்தி**

*திதி: பௌர்ணமி (13.04.2006)*


பற்றுடன் எமை வளத்தீர் பாங்குடன் வாழ்ந்தீர் அப்பா!
ஆலமரவிருட்சம் போல ஆயிரம் பேர் தங்கிடுவார்
சோலை வனமெல்லாம் பாலைவனமானதப்பா!
பரமனவன் தாளடியில் பணிந்துதான் போனீரோ!
மூன்றாண்டு என்ன முப்பது ஆண்டு சென்றாலும்
ஆறாது எம் துயரம் ஆற்றுவார் யாருமில்லை.

மாசேரி, வரணி. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49239) (39-45-15)



## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 05.06.1943

விண்ணுலகில் 13.04.2005

அமரர்
**பிலுப்பையா யேசுராசா**

எமது குடும்பத்தின் ஒளி விளக்கே!
பாசத்தின் உறைவிடமே
அன்பான கணவனாக, தந்தையாக
எம்மை அரவணைத்து நல்வழி காட்டினீரே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று கழிந்ததுவோ
எத்தனை தசாப்தங்கள் கடந்தாலும்
ஆறாது எம் துயரம்
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெற
தினமும் வேண்டுகின்றோம்.

4 ஆம் குறுக்கு வீதி, பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி.49922) (39-45-15)



**DIPLOMA IN COMPUTER HARDWARE**
SPEED BATCH ONLY 20 Hours
GROUP CLASSES
Only For 10 Students
Days:- Sat, Sun.
Time:- 9.30 a.m.
Fees:- 1500/-
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
Batch Starts on 15-04-2006
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13.05.1955



மறைவு 15.03.2003

அமரர்
**நல்லதம்பி இராஜகுலசிங்கம்**
(வவா)

பாசத்தின் திருவிளக்கே- எங்களை
பாரினிலே வளர்த்தெடுத்த- தெய்வமே!
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தும்- உன்
அன்பு முகம் மறையவில்லை- எம் மனதில்
இறைவனிடம் தினம் வேண்டி நிற்கின்றோம்- நீ
மீண்டும் எம்முடன் பிறந்து வர வேண்டும் -என்று

உசன், மிருசுவில். (49379) (39-45-15) - குடும்பத்தினர்.



## சித்திரை புத்தாண்டு மாபெரும் மலிவு விற்பனை

10.04.2006 தொடக்கம் 15.04.2006 வரையும் சிறப்புத் தள்ளுபடியுடன் தமது 29 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சகல விதமான புடைவைத் தினுசுகளையும் மலிவு விலையில் விற்பனை செய்கிறார்கள்.

புதிய சாறி ரகங்கள், புதிய சுரிதார், சோட்ஸ், சுரிதார் சோளிகிட், ஸ்கேட் அன் பிளவுஸ், ஆண்களுக்கான ரவுசர், சேர்ட் வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான எல்லா விதமான ரெடிமேட் வகைகள், அனைத்து ரக பட்டு சாறி வகைகளும் அடங்க விசேட தள்ளுபடியுடன் விற்பனை செய்கிறார்கள். உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.



(சி/48792)(23.21.17.14)

# ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

இல. 13, 14, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 3139
இல. 9, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டம் மாற்றம்; வன்னேரிக்குளம் பகுதி மக்கள் கவலை

அக்கராயன்,ஏப்.13

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் மேற்கொள்ளப்படவிருந்த நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம், பல்லவராயன் கட்டுக் குளத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடிச் சங்கமும் கிராம மக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத்திற்கென மீன் குஞ்சுகள் விடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் மாற்றப்பட்டு பல்லவராயன்கட்டுக் குளத்திற்குள் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன என்று வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடிச் சங்கமும் கிராம மக்களும் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இயங்கும் நீரியல் வளத்துறையின் ஏற்பாட்டில் தம்புள்ளையிலிருந்து 15ஆயிரம் மீன் குஞ்சுகள் வன்னேரிக்குளத்திற்கு எடுத்து வரப்பட்டன.

ஆனால், மீன்குஞ்சுகள் இறுதி நேரத்தில் பல்லவராயன்கட்டுக் குளத்தில் இனப்பெருக்கத்திற்கு விடப்பட்டுள்ளன.

இச்செயற்பாட்டை வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடிச் சங்கம் கண்டித்து கிளிநொச்சி அரச அதிபருக்கு முறைப்பாடு செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னேரிக்குளத்தின் கீழ் விவசாய முயற்சிகள் எதிர்பார்த்தளவு பயன்தராத நிலையில் விவசாயிகள் பலர் நன்னீர் மீன் பிடித்தலில் ஈடுபட்டுப் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் வன்னேரிக்குளத்தில் மீன்குஞ்சுகளை விடும் திட்டம் கைவிடப்பட்டமை அவர்களுக்குக் கவலையளிப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-420)(32)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# துணுக்காய், பாரதிநகர் பகுதியில் ரூ.70 லட்சம் செலவில் அபிவிருத்தி

மல்லாவி,ஏப்.13

வடக்கு - கிழக்கு சமுதாய அபிவிருத்தித் திட்டத்தினர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து துணுக்காய் பிரதேசத்திலுள்ள பாரதிநகரில் 70 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படித் திட்டம் தொடர்பாகப் பொது மக்களிடம் கருத்துக்களைத் திரட்டும் நிகழ்வொன்று கடந்த 4ஆம் திகதி பாரதிநகரில் நடைபெற்றது.

துணுக்காய் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி சா.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பின்வரும் திட்டங்கள் பாரதிநகரில் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

28 லட்சம் ரூபா செலவில் கிராம நிர்வாகச் செயலகம் அமைத்தல்.

21 லட்சம் ரூபா செலவில் கிராம வீதிகளைத் திருத்தியமைத்தல்.

12 லட்சம் ரூபா செலவில் மதகுகளை அமைத்தல்.

வருமான அதிகரிப்பு நடவடிக்கைகளுக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்குதல்.

கிராம மக்களின் தொழிற் பயிற்சிக்காக 5 லட்சம் ரூபாவை ஒதுக்குதல்.

அமைப்புகளுக்கு பயிற்சித் திட்டங்களுக்கென ஒரு லட்சத்து 20 ஆயிரத்தை ஒதுக்குதல் -

எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-322-203)(32)

# கருத்தூட்டல் நிகழ்வு

ஒட்டுசுட்டான்,ஏப்.13

முன்பள்ளி பாதுகாப்பு ஆண்டை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி லோகேஸ்வரி கந்தையா தலைமையில் விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 7ஆம் திகதி காஞ்சூரமோட்டை விஸ்வநாத் முன்பள்ளியில் பெற்றோர்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வு இடம்பெற்றது.

சிறார்களின் போஷாக்கு வளங்களைப் பேணுதல், கல்வியின் முக்கியத்துவம், சிறார்களுக்கான சேமிப்பு என்பவை பற்றிக் கருத்தூட்டல் நிகழ்த்தப்பட்டது.

கருத்தூட்டல் நிகழ்வுகள் தொடர்ந்து கிராமங்கள் தோறும் நடத்தப்படவுள்ளன என்று முன்பள்ளி இணைப்பாளர் தெரிவித்தார்.

(ஒ-341-202) (32)

# தாளையடியில் நீச்சல் தடாகம்

கிளிநொச்சி,ஏப்.13

'சுவிமிங் லங்கா' நிறுவனத்தின் அனுசரணையுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் வடமராட்சி கிழக்கு தாளையடியில் நீச்சல் தடாகம் ஒன்றை அமைத்துள்ளது.

இத்தடாகத்தின் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நீச்சல் பயிற்சி ஆசிரியர் றொச்சரோ தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றினார். நீச்சல் தடாகத்தை 'சுவிமிங் லங்கா' நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு இணைப்பாளர் தபேசன் நாடாவெட்டித் திறந்த வைத்தார். தொடர்ந்து நீச்சல் பயிற்சி இடம்பெற்றது.

(ஒ-202)(32)

# மல்லாவிப் பேருந்து நிலையத்தில் வசதிகளை ஏற்படுத்தக் கோரிக்கை

பரந்தன்,ஏப்.13

மல்லாவி நகரப் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகளை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரி வருகின்றனர்.

தற்போது தனியார் காணியொன்றில் செயற்பட்டுவரும் இந்தப் பேருந்து நிலையத்தில் குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. அத்துடன் சீரான தரிப்பிட வசதியும் இங்கில்லை. இதனால் பேருந்துச் சாரதிகள், நடத்துனர்கள், பயணிகள் ஆகியோர் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆகவே இந்தப் பேருந்து நிலையத்தை அரச காணியில் நிர்மாணித்து, அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு பொது மக்கள் கோருகின்றனர்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தனியார் பேருந்துச் சங்கத்தினர் மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

(ஒ-352)

# சிரமதானம்

ஒட்டுசுட்டான்,ஏப்.13

தியாகி அன்னை பூபதியின் 18ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு ஒட்டுசுட்டானிலுள்ள பரந்தாமன் முன்பள்ளி வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

முன்பள்ளி ஆசிரியை கமலாஜினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ஒ-341-202)(32)



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடனும் அக்கராயன் அபி விருத்தி நிறுவனத்தால் 40 பயனாளிகளுக்கு மானிய உதவியாக 8 லட்சத்து 55 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதேச இணைப்பாளர் சீ.கோ.நல்லையா பயனாளி ஒருவருக்கு மானிய நிதியை வழங்குவதை முதலாவது படத்திலும் ஏனைய பயனாளிகளை இரண்டாவது படத்திலும் காணலாம். முதலாவது படத்தில் அக்கராயன் அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் ம.சுதர்சனும் காணப்படுகின்றார்.

(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

# நீர் விநியோகத்தைச் சீர்செய்வதற்கு முத்தையன்கட்டில் நடவடிக்கை

ஒட்டுசுட்டான்,ஏப்.13

முத்தையன்கட்டு, 4ஆம் கண்டம் பகுதிக்கான நீர் விநியோகம் சீரின்றி இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் முத்தையன்கட்டு கழிவுநீர் பாயும் ஆறினை மறித்துக்கட்டி நீரினை பாய்ச்சுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

குறிப்பிட்ட அணைக்கட்டைக் கட்டுவதற்கு எந்த நிறுவனமும் முன்வராத போதிலும் விவசாயிகளின் அயராத உழைப்பினால் இந்த அணைக்கட்டு கட்டப்பட்டு அதற்கான வான் கதவும் வைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

இந்த அணைக்கட்டினால் சுமார் 100 ஏக்கர் விவசாய நிலம் தண்ணீர் பெறுவதற்கு வாய்ப்பாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-341-202) (32)

# முல்லைத்தீவில் சுனாமியால் பாதித்த சிறுதொழில் வியாபாரிகளுக்கு உதவி

புதுக்குடியிருப்பு,ஏப்.13

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுதொழில் செய்பவர்களுக்கு கிளிநொச்சி மாவட்டக் கைத்தொழில் வணிக ஒன்றியம் முதலீட்டு உதவிகளை வழங்கியுள்ளது.

இதற்கான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் இடம்பெற்றது. வர்த்தகர் சங்கப் பொருளாளர் எஸ்.மோகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட கடற்படைத் தளபதி க.தினேஸ் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை மாவட்டக் கடற்புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை வணிக ஒன்றியத் தலைவர் சோ.வெற்றியரசன், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ.மரியதாஸ் ஆகியோர் ஏற்றினர்.

முதலீட்டு உதவித் திட்டம் குறித்து கைத்தொழில் ஒன்றியத் தலைவர் எஸ்.சூசைமுத்து விளக்கினார். சைக்கிள்களில் பொருள்களை எடுத்துச்சென்று விற்பனை செய்யும் சிறுதொழில் வியாபாரிகள் 20 பேருக்கு இந்த நிகழ்வில் வைத்து முதலீட்டு உதவிகள் வழங்கப்பட்டன.

(ஒ-353)(32)

# தவக்காலச் சிந்தனை 44

## அன்பைப் பகிர்ந்து அன்பு வாழ்வு வாழ்வோம்

### புனித வியாழன்

திருச்சபையின் விசுவாசப் பயணத்தில் இன்றைய நாள் மிகவும் முக்கியமான நாளாகும். இயேசு தாம் பாடுபட்டு மரணிப்பதற்கு முதல் நாளாகிய புனித வியாழக்கிழமை. அன்பின் அடையாளமாகவும் தமது உடனிருப்பை உணர்த்தும் உன்னத அருட்சாதனமாகவும் உறவின் சின்னமாகவும் பகிர்தலின் அடையாளமாகவும் சமத்துவத்தின் வெளிப்பாடாகவும் அப்ப வடிவான திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய புனித நாளாகும்.

தனது பணிவாழ்வின் புனித கருவியாகிய பணிக்குருத்துவத்தை ஆரம்பித்து வைத்து திருப்பலியையும் நற்கருணை விருந்தையும் உருவாக்கினார். அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி கூறி அதைப் பிட்டு அவர்களுக்குத் கொடுத்து 'இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து 'இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலை நிறுத்தப்படும் புதிய உடன்படிக்கை' (லூக் 22:19-20) என்று சீடர்கள் வழிவந்த குருத்துவத்திற்கு அங்கீகா ரம் அளித்து தன்னையே திருவுணவாக மனுக்குலத்திற்கு கொடுத்ததும் இன்றைய நாளிலேதான்.

தலைவனுக்குப் பணிசெய்வது உலக இயல்பு. குருவுக்கு கீழ்ப்படிவது நடைமுறை. கடவுளுக்கு பணிவது பக்திமுறை. ஆனால் குருவும்,போதகரும் ஆண்டவருமாகிய இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவியது பணிவை, அன்பை வெளிப்படுத்திய புதியமுறை. பாதங்களைக் கழுவி முன்மாதிரி காட்டிய இயேசு 'உங்களுக்கு அன்பு நான் செய்தது போல நீங்களும் அன்பொருவருவருக்கொருவர் செய்வீர்' என்னும் அன்புக் கட்டளையால் சீடர்கள் வழியாக அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறார்.

பொறாமையும் விரோதமும் குரோதமும் ஆதிக்கமும் பகைமையும் அன்புக்குத் தடைபோடும் சுவர்களாகும். தியாகமும் பணிவும் தாழ்ச்சியும் கருணையும் பரிவும் அன்பை வலுப்படுத்தும் ஆற்றல் மிக்கவை. தூய்மையான அன்பு உயர்வு, தாழ்வு பார்க்காது. வறுமை - சிறுமை நோக்காது.

நாமும் கிறிஸ்தவர்கள் என்பதற்கு சிறந்த வெளியடையாளம் அன்பு செலுத்துவதும் எம்மைத் தாழ்த்தி பணிபுரிவதுமே. பட்டம், பதவி, புகழ், பணம் தேடும் இவ்வுலகில் நாம் எப்படிப்பட்ட மன நிலையோடு அன்பை பரிமாறுகிறோம்? பதவி ஆசையும் அதிகாரப் போதையும் பணிவாழ்வுக்கு அழகு சேர்க்காது என்பதை உணர்ந்து வாழ்வோம். நற்கருணையில் மெய்யாகவே இறைவன் வாழ்கிறார் [illegible] ஆராதிப்போம். அன்பென்னும் சங்கிலியால் அனைவரையும் [illegible] இறைவனோடு சங்கமமாவோம்.

- எஸ்.பேசுதாஸ், கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முழு நிலாக் கருத்தரங்கு

இடம்: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்
காலம்: 13.04.2006 (வியாழக்கிழமை)
நேரம் பி.ப.3.30 மணி
தலைவர்: திரு.சி.இராசநாயகம்
உபதலைவர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்
விடயம்:
*'யாழ்.குடா நாட்டில் காசநோய் கட்டுப்பாட்டில் காணப்படும் பிரச்சினைகளும் அதனை எதிர்கொள்ளலும்'*
கருத்துரையாளர்:
Dr. பி. யமுனானந்தா
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்.
**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

யாழ்.இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
- *செயலாளர்.*
(சி-48923)(21.15.14)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.13

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-202)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.13

வண்ணார்பண்ணை காட்டுத்துறை பகவதி மாரியம்மன் ஆலய அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகம், அலங்கார பூசை, அம்பாள் வீதியுலா வருதல் என்பன இடம்பெறும்.

எதிர்வரும் புதன்கிழமை மாலை 7 மணிக்கு தண்டிகைத் திருவிழாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பகல் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும் மாலை 7மணிக்கு வீதியுலாவும் இடம்பெறும். (202)

## நகரில் பாத யாத்திரை

'தமிழ் மிஷன்' யேசு கிறிஸ்துவின் பாடுகளை முன்னிட்டு பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பாதயாத்திரை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகரில் நடைபெறவுள்ளது. (ஐ-202)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஆயுள்கால அங்கத்தவரும்
எமது நல்லூர் பிரிவின் தனாதிகாரியுமான
திரு.A.J. குலசிங்கம் *அவர்களின் மகன்*
**குலசிங்கம் ஆன்யாசிந்தா**
*அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், நிர்வாகக் குழு உறுப்பினர்களும்,
நல்லூர் பிரிவு. *(49390) (39.21.15.14)* அங்கத்தவர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்
திரு.செ.திருச்செல்வநாதன் அவர்களின் தாய்
**திருமதி பருவதம் செல்லத்துரை**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
**யா/கனகரத்தினம் ம.ம.வி.**
*(49399) (39.21.15.14)*

## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

**பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, நோர்வே, டென்மார்க், லண்டன், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**

**வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம். இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.**

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1400/- மட்டும்

ஐந்து நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்.

*விசேட விலைக் கழிவு*

5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்
ஒரு கிலோவுக்கு லண்டன் 450/-
சுவிஸ் 600/-

**RAINBOW TRAVELS & TOURS**
32-1/ 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237, 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)
(21.15.14) (சீ/48767)

UNOPS United Nations Office for Project Services

Jaffna Regional Office, 123 Temple Road, Jaffna

## Vacancy Notice

UNOPS invites applications for the post of Site Engineer

**Duty Station: Jaffna**

**Major Duties**

- Supervision of a number of sites
- Supervision of UNOPS site staff
- Quality Control
- Maintenances of site records
- Progress reporting
- Measurement for payment
- Any other duties assigned by supervisor

**Work Experience**

A minimum of 5 years post graduate experience

**Educational qualifications**

A minimum of a degree in Civil Engineering of construction related graduate degree program

Or

Relevant equivalent construction experience

**Language**

Good Knowledge of English both oral and written, to enable routine functions to be carried out independently and interact with other staff members. Knowledge of English and Tamil required.

**Specialised training**


Ability to operate PC, using Microsoft office software.

Salary will be commensurate with qualifications and experience.

Those who possess the required qualifications and wish to apply for the above post, please submit their applications to **Field Co-ordinator, UNOPS, 123 Temple Road, Jaffna** on or before Friday the 21st of April 2006

Interviews will be granted to short listed candidates only

(49374)



**யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா**
**14.04.2006 (வெள்ளிக்கிழமை)**
**வசந்த மண்டபப் பூசை - காலை 8.15 மணி**
**எம்பெருமான் தேரில் எழுந்தருளல் - காலை 9 மணி**
(சி-48919)(21.15.14)
- *ஆலய நிர்வாக சபையினர்.*


**யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்**
**சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்**



**Style Park**
Perfect Collection
**ஸ்ரைல் பார்க்**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் யாழ். நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள்
அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜம்



அனைத்து வகையான கடன் அட்டைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்
MasterCard
VISA

No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383
இல. 171. கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபி பிறந்ததினக் கொண்டாட்டத்தில் குண்டு வெடித்து 55 பேர் உயிரிழப்பு

கராச்சி,ஏப்.13

பாகிஸ்தான் கராச்சி நகரில் உள்ள பூங்கா ஒன்றில் மிலாத் நபியைக் கொண்டாட குழுமியிருந்த மக்கள் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென பலத்த சத்தத்துடன் வெடிகுண்டு வெடித்தது. இதில் 55 பேர் பலியாகினர். மேலும் 12 பேர் காயமடைந்தனர்.

கராச்சிப் பொது மருத்துவ மனைக்கு மட்டும் 21 சடலங்கள் கொண்டுவரப்பட்டன.

கராச்சியின் தெற்குப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் மேலும் சில சடலங்கள் இருந்ததாகத் தகவல்கள் வெளியாகின. மேலும் பலர் படுகாயமடைந்து மருத்துவ மனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாகவும் கூறப்படுகின்றது. இந்த வன்முறைத் தாக்குதலுக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை. பூங்காவில் குடியிருந்தவர்கள் அனைவரும் சன்னி பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள். பாகிஸ்தானில் குறிப்பாக கராச்சியில் கடந்த சில ஆண்டுகாலமாக சன்னி மற்றும் ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கு இடையிலான வன்முறை சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



(ஐ-202)(30)

# நாற்பது ஆண்டுகள் தேடப்பட்டுவந்த 'மாபியா' குழுத் தலைவர் சிக்கினார்

சுமார் நாற்பது ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்தவரான 'கொசா நொஸ்ரா' என்ற 'மாபியா' கும்பல் தலைவர் பெர்னார்டோ புரொவென் சனோ (வயது-72) பொலீஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

சிசிலி நாட்டின் கொர்லியொன் பகுதியில் உள்ள பண்ணை வீட்டில் வைத்து இவர் பொலீஸாரிடம் சிக்கினார்.

உலகளாவிய ரீதியில் கொலைகள், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்களில் 'கொசா நொய்ரா' மாபியா குழு ஈடுபட்டு வருகிறது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதிப் பகுதியில் கிசிலியின் கொர்லியொன் பகுதியில் மாபியா குழு உருவானது. இது தலைமுறை தலைமுறையாக ஒரு குடும்பத்தின் கீழ் செயற்பட்டுவருகிறது.

1993 ஆம் ஆண்டு மாபியா குழுவின் தலைவராகச் செயற்பட்ட சல்வடோர் கைதுசெய்யப்பட்டபின்னர் பெர்னார்டோ அதன் தலைவராகச் செயற்பட்டுவந்தார்.

இவர் கொலைகள், உட்பட பல குற்றச் செயல்களில் ஈடுபட்டார்.



என்ற தற்காக 1963 ஆம் ஆண்டில் இவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், இவர் பொலீஸாரின் பிடியில் சிக்காமல் இருந்தார். தற்போது இவர் பிடிப்பட்டிருப்பது சிசிலியின் சட்டம் - ஒழுங்கு நடவடிக்கைக்குக் கிடைத்த பாரிய வெற்றி என்று கருதப்படுகிறது.

உலகின் பல நாடுகளிலும் பொலீஸாரர் மாபியா குழுவின் குற்றச் செயல்களுக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

மாபியா குழுவை மையமாக வைத்து 'கோட்பாதர்' என்ற ஆங்கிலத் திரைப்படம் வெளியிடப்பட்டது. இத்திரைப்படம் பெரும் வெற்றியைப் பெற்றதுடன், மாபியா குடும்பத்தலைவராக நடித்த மார்லன் பிராண்டோவுக்கு சிறந்த நடிகருக்கான ஒஸ்கார் விருதும் வழங்கப்பட்டது. இதன் பின்னர் மாபியா குழு பொதுமக்களின் கவனத்துக்கு வந்தது. (ஒ)(30)

# சந்திரனில் தண்ணீர் உள்ளதாவென கண்டறிய 'நாஸா'வின் புதிய திட்டம்

வாஷிங்ரன்,ஏப்.13

சந்திரனில் தண்ணீர் இருக்கிறதா எனக் கண்டறிய பிரத்தியேக விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தை அமெரிக்காவின் நாசா 'விண்வெளி ஆராய்ச்சி மையம் வடிவமைத்துள்ளது. பூமியில் இருந்து நிலவுக்கு 'எல்கிராஸ்' என்ற பிரத்தியேக விண்கலம் அனுப்பப்பட்டு, குறிப்பிட்ட நேரத்தில் அது நிலவில் மோத விடப்படும். மோதுவதற்கு சற்று முன்னதாக இந்த விண்கலத்தில் இருந்து தனியே பிரியும் பாகத்தின் மூலம், விண்கலம் மோதுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் படம் பிடித்து பூமிக்கு அனுப்பப்படும். பதினைந்து நிமிடங்களுக்குப் பின்னர் இந்தப் பாகமும் நிலவில் மோதி சிதறும். இதிலிருந்தும் இரண்டாவது பாகம் ஒன்று வெளியாகி மோதல் விளைவுகள் குறித்த செய்திகளை கண்காணிப்பு செயற்கைக்கோள் மூலம் பூமிக்கு அனுப்பும். 'எல்கிராஸ்' விண்கலம் மோதுவதால் நிலவில் 16 அடி ஆழத்துக்கு துளை ஏற்படும் என்றும் ஒன்பது லட்சத்து 98 ஆயிரம் கிலோ எடை கொண்ட துகள்கள் வெளிப்படும் என்றும் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். இந்த ஆராய்ச்சித் திட்டத்தின் மூலம் நிலவில் தண்ணீரின் இருப்பு குறித்த புதிய உண்மைகள் புலப்படும் என நாசா விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 2008ஆம் ஆண்டு இந்தத் திட்டம் செயற் படுத்தப்படுகிறது. விண்கலம் நிலவில் மோதுவதை பூமியில் இருந்தபடியே தொலைநோக்கிக் கருவி மூலம் பார்க்க முடியும். (ஒ)

உலக அரங்கில்

# இத்தாலி நாடாளுமன்றத் தேர்தல் எவருக்கும் பெரும்பான்மை இல்லை

இத்தாலி நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியான இடதுசாரி அணி மிகக்குறைந்த சதவீத வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது. இத்தாலி நாடாளுமன்றத்தில் இரண்டு சபைகள் உள்ளன. மேல் சபையில் 315 இடங்கள் உள்ளன. கீழ் சபையில் 630 இடங்கள் உள்ளன. தற்போது இத்தாலியில் பிரதமர் சில்வியோ பெர்லோஸ்கானி தலைமையிலான வலதுசாரி அணி ஆட்சியில் உள்ளது.

இத்தாலியில் சில நாள்களுக்கு முன் தேர்தல் நடந்தது. இதில் ரொமனோ புராடி தலைமையிலான இடதுசாரி அணி 49.81 சதவீத வாக்குகளைப் பெற்றது. ஆளும் வலது சாரி அணி 49.74 சதவீத வாக்குகள் பெற்றது. இரண்டு அணிகளுக்கும் 50 சதவீத வாக்குகள் என்ற இலக்கை எட்டிப் பிடிக்கவில்லை. இரண்டு அணிகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் மிகக் குறைந்த அளவே உள்ளது. புராடியின் இடதுசாரி அணி, வலது சாரி அணியை விட 25 ஆயிரம் வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்றுள்ளது.

எனவே, தங்கள் அணி வெற்றி பெற்று விட்டதாக ரொமானோ புராடி உற்சாகத்துடன் அறிவித்தார். ஆனால், இதைப் பிரதமர் பெர்லோஸ்கானியும், அவரது வலது சாரி அணியும் ஏற்றுக்கொள்ளவில்லை.

புராடி தலைமையில் புதிய அரசு அமைந்தால் அது நீண்ட நாள்கள் நிலைக்காது. புதிய திட்டங்கள் மற்றும் சட்டங்களைக் கொண்டுவரும் போது அதற்கு இரண்டு சபைகளின் ஒப்புதல் கிடைத்தால்த்தான் அமுல்ப் படுத்த முடியும். எனவே ஒவ்வொரு விஷயத்திலும் புராடி கடும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருக்கும் என அந்நாட்டு அரசியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ)

# அதிரவைத்த தொலைபேசிக் கட்டணம்

மலேசியாவில் கேடாஹ் மாநிலத்தில் யஹாயா என்வருக்கு மலேசியா ரெலிகொம் நிறுவனம் தொலைபேசிக் கட்டணப் பட்டியலை அனுப்பியது. அதில் தொலைபேசிக் கட்டணமாக 9 ஆயிரத்து 81 இலட்சம் கோடி ரூபாவை யஹாயா செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் இதைக் கண்டு அதிர்ந்துபோயுள்ளார். மூன்று மாதங்களின் முன்பே தொலைபேசியை ரெலிக்கொம் நிறுவனத்துக்குத் திரும்பிக்கொடுத்து கட்டணம் முழுவதையும் செலுத்திவிட்டதாக யஹாயா கூறுகின்றார். (ஒ)(30)

# தமிழக தேர்தல் களம்

## வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பம்

தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு இன்று வேட்புமனுத்தாக்கல் ஆரம்பமாகிறது. இம்மாதம் 20ஆம் திகதி வரை மனுத்தாக்கல் செய்யலாம். முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் முன்னதாகவே அறிவிக்கப்பட்டு விட்டதால, 234 தொகுதிகளிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்ய ஏராளமான வேட்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். வேட்பு மனுத்தாக்கல் தொடக்கத்துடன் இந்த வாரமே தேர்தல் களம் சூடுபிடிக்க உள்ளது. தமிழக சட்டசபைக்கு மே 8ஆம் திகதி தேர்தல் நடக்க உள்ளது. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் நான்கு கோடியே 63 லட்சத்து 62 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில், ஆண்கள் இரண்டு கோடியே 29 லட்சத்து 84 ஆயிரம் பேர். பெண்கள் இரண்டு கோடியே 33 லட்சத்து 78 ஆயிரம் பேர். (ஒ)

## கச்சதீவைக் குத்தகைக்குப் பெற மத்திய அரசை வலியுறுத்துவோம்!

### தமிழக முதல்வர் தெரிவிப்பு



கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பெறுவதற்காக, கச்சதீவை நிரந்தரக் குத்தகை அடிப்படையில் பெறவேண்டும் என்று மத்திய அரசை அ.தி.மு.க. அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

கன்னியாகுமரியில் அவர் பேசியதாவது:-மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் உபயோகப்படுத்தும் டீசலுக்கு விற்பனை வரியை முழுவதுமாக நீக்கி, விற்பனை வரியில்லாமல் மீனவர்களுக்கு அ.தி.மு.க. அரசு டீசல் வழங்கிவருகிறது.

கச்சதீவுப் பகுதியில், இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பெறுவதற்காக கச்சதீவை நிரந்தரக் குத்தகை அடிப்படையில் பெற வேண்டும் என்று மத்திய அரசை அ.தி.மு.க. அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

மீனவர் பாதுகாப்புத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம் போன்றுமீனவர் பாதுகாப்புத் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் - என்றார் ஜெயலலிதா. (ஒ)(30)

## சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பில் வைகோ, ஜெயலலிதா நிலைதான் என்ன?

### மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கேள்வி

சேதுசமுத்திரத் திட்டத்தை வைகோ எதிர்க்கப் போகிறாரா அல்லது ஜெயலலிதா ஆதரிக்கப் போகிறாரா? மத்திய நிதி அமைச்சர் சிதம்பரம் தேவகோட்டையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய போது கேள்வி எழுப்பினார்.

வேட்பாளர் ராமசாமிக்கு ஆதரவாக செயல்வீரர்கள் கூட்டம் தி.மு.க. மாவட்டச் செயலாளர் பெரியகருப்பன் தலைமையில் நடந்தது.

அவர் மேலும் கூறியதாவது:-

பொல்லாத ஆட்சி நடந்தால் அடிக்கடி தேர்தல் வருவது நல்லது. நல்லாட்சி நடந்தால் எப்பொழுது வேண்டுமென்றாலும் தேர்தல் வரலாம். ஜெ.ஆட்சி 10 ஆண்டு நடப்பதாக கனவு கண்டால் பயங்கரமாக இருக்கிறது. 4 ஆண்டுக்குப் பிறகு ஜெ. ஆட்சியின் மமதை, ஆணவம் அடங்கியிருக்கிறது. 10 ஆண்டு கழித்துத்தான் தேர்தல் என்றால் 9ஆம் ஆண்டில்தான் மமதை அடங்கியிருக்கும். ஜெ இயற்கையிலேயே ஜனநாயக வாதி அல்ல சர்வாதிகாரிதான். ஏற்கனவே செய்ததைப் போல் மீண்டும் அனைவரையும் பழிவாங்கமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம். இந்த ஆட்சியில் 5 தலைமைசெயலாளர் மாறியிருக்கின்றனர். தொழில் மந்திரி யார் என்று யாருக்கும் தெரியாது.

இப்போது வைகோ சேதுசமுத்திர திட்டத்தை ஆதரிக்கிறார். ஜெயலலிதா எதிர்க்கிறார். வைகோ தனி ஈழம் கேட்கிறார். ஜெயலலிதா எதிர்க்கிறார். அவர் நேற்று வரை நாத்திகவாதி. இவரோ முழுக்க பழுத்த ஆன்மீகவாதி. இனி சேதுசமுத்திர திட்டத்தை வைகோ எதிர்க்கப் போகிறாரா . இல்லை ஜெயலலிதா ஆதரிக்கப் போகிறாரா என்றார் ப.சிதம்பரம். (ஒ)(30)

## விஜயகாந்த் 2ஆம் கட்டப் பிரசாரம்



தமிழகத்தின் அனைத்துச் சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடும் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் நிறுவுநர் நடிகர் விஜயகாந்த் தனது இரண்டாம் கட்டப் பிரசாரத்தை நேற்று ஆரம்பித்தார்.

தேசிய முற்போக்கு திராவிடர் கழக நிறுவுநர் நடிகர் விஜயகாந்த் முதற்கட்ட தேர்தல் பிரசாரத்தை நேற்றுமுன்தினம் முடித்தார்.

கடந்த 90 நாள்களில் தமிழகம் முழுவதும் 27 ஆயிரம் கி.மீ தூரம் பிரசாரப் பயணம் மேற்கொண்ட அவர், புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதியில் முதற் கட்டப் பிரசாரத்தை முடித்தார்.

தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் இவரது கட்சி தனித்துப் போட்டியிடுகிறது. புதுவையில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளில் இக் கட்சி 27 இடங்களில் போட்டியிடுகிறது.

இரண்டாம் கட்டப் பிரசார பயணத்தை விஜயகாந் நேற்று மதுரையில் தொடங்கினார். மே 6ஆம் திகதி வரையில் அவர் பிரசாரம் செய்கிறார். (ஒ)

## சரத். முடிவுக்கு ரசிகர்கள் ஆதரவு



தி.மு.க.வை விட்டு விலகிய நடிகர் சரத்குமாருக்கு ரசிகர் மன்றத்தினர் பலத்த வரவேற்புத் தெரிவித்துள்ளனர். சமாதானம் பேசினாலும் மீண்டும் தி.மு.க.,வில் சேரக் கூடாது என்றும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து உடனே முடிவு எடுக்குமாறும் ரசிகர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நடிகர் சரத்குமார் தி.மு.க.,விலிருந்து ராஜினாமா செய்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார். அவரது அனுமதியுடன் சரத்குமாரை சமாதானப்படுத்த கட்சியில் முக்கியமானவர்கள் சிலர் பேச்சு வார்த்தை நடத்த முயன்றதாக தெரிகிறது. அதற்கு சரத்குமார் பதில் ஏதும் சொல்லவில்லை.

அவர் எந்த கட்சியில் சேரப் போகிறார் என்று உடனடியாக எந்த முடிவும் எடுக்கும் நிலையில் இல்லை. நாளை அவரது ராடன் 'டிவி' அலுவலகம் சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்படுகிறது. அதில் கலந்துகொள்ள இன்று சரத்குமாரும், ராதிகாவும் சிங்கப்பூர் செல்கின்றனர். அங்கு சில நாள்கள் தங்கியிருக்கும் இருவரும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இறுதி முடிவு எடுத்த பிறகு சென்னை திரும்பவுள்ளனர் என்றும் சரத்குமார் ரசிகர் மன்ற வட்டாரத்தில் கூறப்பட்டது.

சிங்கப்பூர் செல்வதற்கு முன்பாக அவர் முதல்வர் ஜெயலலிதாவை சந்திப்பார் என்றும், அ.தி.மு.கவுக்கு ஆதரவு தெரிவிப்பார் என்றும் கடைசித் தகவல்கள் தெரிவித்தன. (ஒ)(30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

புதிய Hero Honda CBZ மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777252041 (49227)

### வீடு விற்பனைக்கு

பழைய பூங்கா வீதியில் கொய்யாத்தோட்டம் பகுதியில் ஒரு பரப்புக் காணியில் அமைந்த கடையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776273163. (49407)

### தவறிவிட்டது

முகமாலையில் இரண்டு கைப்பைகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் M.சூசைப்பிள்ளை இல.55, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0776590444, 0773288728. (49404)

### வீடு வாடகைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. நாள் வாடகைக்கும் திருமண வைபவங்களிற்கும் வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் வழங்கப்படும். தொடர்பு:0773186842. (49059)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா P.R உள்ள, 1973 இல் பிறந்த, உத்தரட்டாதி நட்சத்திரம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மெல்லிய, படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2852, மே/பா உதயன், (49416)

இந்து கௌரவ குடும்பம், 1973, 7 இல் செவ்வாய் 30 பாவம் உடைய தனியாக தொழில் செய்யும் மணமகனுக்கு அதே செவ்வாய் குற்றமுள்ள ஜாதக, பண்பான மணமகள் தேவை. தெளிவான விவரங்களுடன் T.P. நம்பரையும் தரவும். தொடர்பிற்கு விளம்பர இல. 2850 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (49409)

### கொழும்பில் அறை வாடகைக்கு

கொழும்பு தெகிவளையில் படிக்கும் மாணவன் ஒருவருக்கு இன்னொருவருடன் சேர்ந்து இருக்க பெரிய அறை Galle Road இற்கு அண்மையாக உண்டு. (சனிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்) தொடர்பிற்கு ஆனந்தன் 0776110781 - சுதுமலை. (49380)

### மணப்பெண் அலங்காரம்

வீடுகளில் வந்து மணப்பெண் அலங்காரம் செய்துதரப்படும். 5,000/- தொடர்பிற்கு: **வேணி**, உரும்பிராய். தொ.பே.இல 077 - 9235991 (49368)

### வீடு வாடகைக்கு

இல.64, பழைய பூங்கா வீதியில் 4 அறைகளுடன்வீடு உடன்வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: S. மரியதாஸ், 32/16, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.

**T.P. 021 222 6266**

(47574) (21.15.14)

## சிலுவை தியான வழிபாடு

வலி.தென்மேற்கு, ஏப்.13

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீன பண்டத்தரிப்புத் திருச் சபை ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பெரியவெள்ளியை முன்னிட்டு காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சிலுவை தியான வழிபாடு நடைபெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கல்லறைத் தோட்ட வழிபாடும், மறுநாள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உயிர்தெழுந்த ஞாயிறுவழிபாடு, தூய நற்கருணை வழிபாடு, மணி பவனி ஆகியனவும் நடைபெறவுள்ளன என்று சபைக் குரு. அருட்திரு வே.பத்மதயாளன் தெரிவித்துள்ளார்.

(ஐ-135)

## கிறிஸ்தவ உயிர்ப்பு விழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் கிறிஸ்து உயிர்ப்பு விழா எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு கல்லூரியில் நடை பெறவுள்ளது. 'உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவதேன்' என்ற இசை நாடக நிகழ்வும் இதில் இடம் பெறும். (ஐ-135)

## மந்துவில் மேற்கில் மின்சார வசதி

மந்துவில் மேற்கு, விநாயகர் வீதி, சந்திரன் கேணித் தெரு, செம்பாடு ஆகிய கிராமங்களுக்கு அண்மையில் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் சிபார்சில் மின் வழங்கப்பட்டதாகவும் தற்போது சுமார் 75 இற்கு மேற்பட்ட வீடுகள் மின்சாரம் பெறக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-122)

## சிறுதானியப் பயிர்ச்செய்கை

சாவகச்சேரி வயல்வெளிகளில் கால போக நெல் அறுவடைக்குப் பின்னர் விவசாயிகள் சிறுதானியத்தை பெருமளவு பயிரிட்டுள்ளனர்.

உழுந்து, பயறு, கௌபி போன்றவை பயிரிடப் பட்டுள்ளன. (202-31)



உ

**தெல்லிப்பழை**

**காசிவிநாயகர் தேவஸ்தானம்**

## மகோற்சவ விஞ்ஞாபனம்

14.04.2006 வெள்ளி பகல் 11 மணி கொடியேற்றம்
21.04.2006 வெள்ளி பகல் 10 மணி சங்காபிஷேகம்
,, மாலை 3 மணி வேட்டைத்திருவிழா
,, மாலை 6 மணி சப்பரத்திருவிழா
22.04.2006 சனி பகல்10.30 மணி பஞ்சமுக விநாயகர் சித்திரத் தேரில் ஆரோகணித்தல்
23.04.2006 ஞாயிறு பகல் 11.30 மணி தீர்த்தத்திருவிழா
மாலை 5 மணி கொடியிறக்கம்
24.04.2006 திங்கள் மாலை 4.30 மணி சித்திபுத்தி சமேத விநாயகருக்கு திருக்கல்யாண உற்சவம்.

**சிவஸ்ரீ சி.கணேசலிங்க குருக்கள்**
**ஆதீனகர்த்தா**

(49387)



உ

கணபதி துணை

**தாவடி அருள்மிகு**

**ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய**

## சப்பரத் திருவிழா விஞ்ஞாபனம் 13.04.2006

திருநெல்வேலி, ராஜன் சிற்பாலயத்தில் திவ்ய சிற்ப சிரோன்மணி ஸ்ரீ இராசதுரை பிரபாகரன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு 10.04.2006 இல் வெள்ளோட்டம் நிகழ்த்தப்பட்ட புதிய சப்பரத்தில் 16ஆம் திருவிழா இன்று 13.04.2006 வியாழக்கிழமை மாலை 8 மணிக்கு விநாயகப் பெருமான், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமியுடன் எழுந்தருளி வீதியுலா வரவுள்ளார்.

புதிய சப்பரத்தில் விநாயகப் பெருமான் எழுந்தருளும் திவ்விய காட்சியைக் கண்டு, பிறக்க இருக்கும் புதுவருடம் எல்லோருக்கும் நன்மை பயக்க வரவேண்டுமெனப் பிரார்த்திக்க வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-48924) **16ஆம் திருவிழா உபயகாரர்.**

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. பணிநிலை:- **கணனி நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்பாளர்**
**Computer Programmer**
தகைமை:- BIT கற்கை நெறி அல்லது அதனையொத்த கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணனிக் கல்வியில் பொது/சிறப்புப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
கணனி நிகழ்ச்சித் திட்டத் தயாரிப்புக் கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழும், இரண்டு (02) வருட பட்டறிவும் உடையவராக இருத்தல்வேண்டும்.
ஊதியம்:- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
நேரில் வருகை தரவேண்டிய காலம்:-2006.04.22ஆம் நாள் சனிக்கிழமை காலை 9 மணி.

02. பணிநிலை :- **தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
தகைமை :- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NATIONAL DIPLOMA IN TECHNOLOGY (NDT)
அல்லது
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ்
NATIONAL CERTIFICATE IN TECHNOLOGY (NCT)
அல்லது
பட வரைஞர் DRAUGHTMEN SHIP
ஊதியம் :- நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
அகவை :- 24 ஆண்டுகளுக்கு மேல்.
நேரில் வருகை தரவேண்டிய காலம் :- 2006.04.22ஆம் நாள் சனிக்கிழமை மு.ப. 10.30 மணி.

03. பணிநிலை:- **வேலை மேற்பார்வையாளர் தரம் - 03**
தகைமைகள்:- க.பொ.த. சாதாரண தரத்தில் ஐந்து (05) பாடங்களில் ஒரேஅமர்வில் சித்தியடைந்திருப்பதுடன், கட்டுமானத் துறையில் வேலை மேற்பார்வையாளர் பணியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல்வேண்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 3,670 - 5,070 + 6,000 + 1,200
70 X 20
அகவை எல்லை:- 25-40 ஆண்டுகள்.
நேரில் வருகை தரவேண்டிய காலம் :- 2006.04.22ஆம் நாள் சனிக்கிழமை மு.ப. 11 மணி.

04. பணிநிலை:- **அலுவலக உதவியாளர் தரம் - 03**
தகைமைகள்:- I. க.பொ.த (சாதாரண தர) தேர்வில் கணிதம் (42/ கணிதம் II), தமிழ் உட்பட குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும்.
II. ஆண்கள் மட்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 2,870 - 4,070 + 6,000 + 1,200
60 X 20
அகவை எல்லை:- 18-25 ஆண்டுகள்
நேரில் வருகைதரவேண்டிய காலம் :- 2006.04.25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணி.

05. பணிநிலை:- **அலுவலக உதவியாளர் தரம் - 04**
தகைமைகள்:- I. க.பொ.த (சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 04 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்கவேண்டும்.
II.ஆண்கள் மட்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 1,870 - 2,870 + 6,000 + 1,200
50 X 20
அகவை எல்லை:- 18-25 ஆண்டுகள்.
நேரில் வருகைதரவேண்டிய காலம் :- 2006.04.25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி.

06. பணிநிலை:- **ஊர்தி ஓட்டுநர் தரம் - 03**
தகைமைகள்:- I. க.பொ.த. (சாதாரண தர) தேர்வில் ஆகக்குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்வேண்டும்.
II. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல்வேண்டும்.
III. ஆண்கள் மட்டும்.
ஊதிய அளவுத்திட்டம்:- 3,310 - 4,510 + 6,000 + 1,200
60 X 20
அகவை எல்லை:- 25-35 ஆண்டுகள்.
நேரில் வருகைதரவேண்டிய காலம் :- 2006.04.25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணி.

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் ஆக்கப்பட்ட தன்விளக்கத்துடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் தமிழீழ வைப்பகம், நடுவப்பணியகம், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
02. பட்டறிவுச் சான்றிதழ்.
03. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்.
04. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.
05. [illegible] சான்றிதழ்.

**மனிதவள மேலாளர்,**
**மனிவளப் பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி/48750)(32-17-16)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரீ.ஆர்.ஓ. பணியாளரை விடுவிக்கக்கோரி யாழ்.நகரில் நேற்று அமைதிப் பேரணி!

## தொண்டு நிறுவனங்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஏப்.13

கடந்த ஜனவரி மாதம் கடத்திச்செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்கக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

நேற்றுக்காலை நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் முன்பாக ஒன்று திரண்ட அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், பணியாளர்கள், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் அங்கிருந்து பேரணியை ஆரம்பித்தனர்.

கடத்தப்பட்ட பணியாளர்களை விடுவிக்கக்கோரும் சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் சுமந்துசென்றனர். நல்லூரில் இருந்து கோவில் வீதியூடாக நகர்ந்த பேரணி யாழ்.அரச செயலகத்தைச் சென்றடைந்தது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முகவரியிட்டு யாழ்.அரச அதிபர் கே.கணேஷிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எஸ்.சிவசுப்பிரமணியம் இந்த மகஜரைக் கையளித்தார்.

பேரணி சென்ற வழியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகம் ஆகியவற்றிலும் அங்குள்ள வதிவிடப் பிரதிநிதிகளிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதம்பரநாதன், கிட்டிணன் சிவநேசன் ஆகியோரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

நேற்றைய அமைதிப் பேரணியை நடத்துவதற்குப் பொலீஸாரின் ஒத்துழைப்புக் கோரப்பட்டிருந்ததால் பேரணி சென்ற வழி நெடுகிலும் போக்குவரத்துப் பொலீஸ் பிரிவினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (ஐ-7-13)



அமைதிப் பேரணிக் காட்சிகள்...















படங்கள் : ஒளிஅதிரன், மதுபாலா





## இளவாலை ஆஸ்பத்திரிக் கட்டடத்துக்கு காணிபெற உதவும்படி வேண்டுகோள்

வலி.தென்மேற்கு,ஏப்.13

இளவாலை அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுவதற்கு காணி ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கு பொது நல அமைப்புகள் முன்வர வேண்டும்.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கணேசலிங்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீண்ட காலமாகத் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் வசதியற்ற நிலையில் இவ் வைத்தியசாலை இயங்கி வருவதாகவும் -

நிரந்தரக் கட்டடம் நிறுவ நிதி ஒதுக்கீடு செய்வதற்கு யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் முன்வந்துள்ளார் என்றும் - பொறுப்பதிகாரி கூறியுள்ளார்.

இதற்கான காணி ஒன்றைப் பொருத்தமான இடத்தில் அன்பளிப்பாக வழங்க இப்பகுதி மக்கள் முன்வரும் பட்சத்தில் வைத்தியசாலைக் கட்டடத்தை இங்கு நிர்மாணிக்க முடியும். இப் பகுதியிலுள்ள பொதுநல நிறுவனங்கள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி பொருத்தமானதொரு காணியைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிக்க வேண்டும். இங்கு வைத்தியசாலைக்கென நவீன முறையில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டால் இப் பகுதி மக்கள் வைத்திய வசதிகளை மேலும் சிறந்த முறையில் பெறக் கூடியதாக இருக்கும். - இவ்வாறு அவர் மேலும் கூறினார். (ஒ-135)

## கடத்தப்பட்ட ரீ.ஆர்.ஓ. பணியாளர்கள் விடயத்தில்

# ஜனாதிபதி கவனம் செலுத்தாதது பற்றி அரசசார்பற்ற நிறுவனங்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஏப்.13

கடந்த ஜனவரியில் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாதது குறித்து அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

கடத்தப்பட்ட பணியாளர்களை விடுவிக்கக்கோரி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நேற்று யாழ். நகரில் நடத்திய பேரணியின் முடிவில் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்ட மகஜரில் இந்த அதிருப்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மகஜரின் முழு விவரம் வருமாறு:-

ஜனவரி 29,30 ஆம் திகதிகளில் வெலிகந்தையில் கடத்தப்பட்ட மனித நேயப் பணியாளர்கள் தொடர்பாக உங்களுக்கு எங்களால் 01.02.2006 அன்று வரையப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை ஆழ்ந்த மனவருத்தத்துடனும் கவலையுடனும் உங்கள் கவனத்திற்குகொண்டுவர விரும்புகிறோம்.

இந்த விடயத்தை நீங்கள் உண்மையாகப் பாரபட்சம் அற்ற விதத்தில் கவனத்தில் எடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்பி ஏமாந்துவிட்டோம்.

சர்வதேச அரங்கில் இப்படிப்பட்ட கடத்தல்கள் நிகழ்கின்ற வேளைகளில் நாம் உரக்க குரல் கொடுத்து சம்பந்தப்பட்ட வட்டாரங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், ஸ்ரீலங்காவில் மனிதநேயமற்ற துக்ககரமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது இதுவே முதல் முறையாகும். இந்தச் சம்பவத்திற்கு மனிதநேய அமைப்புக்கள் ஒன்றிணைந்து கண்டனம் தெரிவித்தும் எதவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வில்லை.

வெலிகந்தையில் கடத்தப்பட்ட 10 மனிதநேயப் பணியாளர்களில் 3 பேர் விடுவிக்கப்பட்டது [illegible] தலை செய்யப்ப[illegible] புடனும் நம்பிக்[illegible]புடனும் இன்றுவரை காத்திருந்தும் எதுவித பலனும் ஏற்படவில்லை.

ஆதலால் மேலும் காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம். இப் பணியாளர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவை. இவர்களே குடும்பசுமையை ஏற்றுள்ளதாலும் இதனை உங்கள் கவனத்திற்கு ஈர்த்து[illegible]ளோம். நீண்ட நாள்களாகத் தொடர்ந்து கடத்தி வைக்கப்பட்டவர்களின் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கலாம். அத்துடன், தொடர்ந்தும் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

மேலும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட இடத்தில் அத்தியாவசியமான தேவைகள் கிடைக்கின்றனவா அல்லது இம்சைக்கு உள்ளாக்கப்படாது இருக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதனைத் தாங்கள் உடன் கவனத்திற்கு எடுத்து பாதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-13-07)(30)

## நூல்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஏப்.13

இலங்கை திருவள்ளுவர் மகா சபையினர் தரம் - 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்பாக அண்மையில் வழங்கியுள்ளனர்.

நூல்கள் கொள்வனவு செய்வதற்கான நிதியினை நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் கடந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கியிருந்தார் என்று மகா சபை தலைவர் நா.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார். (ஒ-117)


## மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறு பிள்ளைகளுக்கான சிகிச்சைப்பிரிவுக்கு வைத்திய நிபுணர் தென்னிலங்கையைச் சேர்ந்த திருமதி சில்வா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வார முற்பகுதியில் இவர் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், தீர்த்தக்கேணி ஆகியவற்றை மேலுள்ள படங்களிலும் பக்தர்கள் நேர்த்திக் கடன் செலுத்த பொங்கல் இடுவதையும் தூக்குக் காவடி எடுப்பதையும் கீழுள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)*

# முனீஸ்வரன் வீதியோரக் கடைகளை அகற்றாவிட்டால் சட்ட நடவடிக்கை

## அங்காடிகள் சங்கத்திற்கு மாநகரசபை கடிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகளை குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் அகற்றாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் யாழ். நடைபாதை வியாபார அங்காடிச் சங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். முனீஸ்வரன் வீதி நடைபாதை வியாபாரிகளுக்குரிய இடமல்ல. பொது மக்களதும் வாகனங்களதும் போக்குவரத்திற்கு உரிய வீதியாகும். அத்துடன் நடைபாதை வியாபார அங்காடி ஒன்று பல இலட்சம் ரூபா செலவில் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தனியார் மினிபஸ் சங்கத்தை இப்பாதை ஊடாக பிரயாணத்தைத் தொடங்குமாறு மாநகரசபை வேண்டியுள்ளது. நகர மத்தியில் மினிபஸ்கள் நிற்பதால் பொது மக்கள் நாள்தோறும் இன்னல்படுகின்றனர். இவர்களுக்கு பண்ணையில் ஓர் தரிப்பிடம் பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது. முனீஸ்வரன் வீதிக் கடை கள் அகற்றப்பட்டால் மினிபஸ்களை பண்ணை தரிப்பிடத்திற்குக் கொண்டுசெல்வதற்கும் முனீஸ்வரன் வீதியூடாக தமது பிரயாணத்தை நடைமுறைப்படுத்தவும் மினி பஸ் உரிமையாளர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர்.

பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் பற்றிப் பல பொது அமைப்புக்கள் பத்திரிகைகள் மூலமும் கலந்துரையாடல்களிலும் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே, இவற்றைப் பார்த்துக்கொண்டு மாநகர சபையால் இருக்க முடியாது.

அங்காடி வியாபாரிகளை வீதியிலிருந்து அகற்றுவதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுத்தபோ[illegible] நாங்கள் பல கோரிக்கைகளை எழுத் [illegible]லம் தந்து சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு 15.04.2006 ஆம் திகதி வரை முனீஸ்வரன் வீதியில் வியாபாரம் செய்வதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் சபை உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அங்காடி வியாபார சங்க உறுப்பினர்கள் சம்மதித்து கைச்சாத்திட்டுள்ளார்கள்.

மேலும் சங்கத்தால் 17.03.2006 ஆம் திகதி மீண்டும் 47 வியாபாரிகள் ஒப்பமிட்டு ஓர் கடிதம் அனுப்பியிருந்தீர்கள். ஆனால், 120 வியாபாரிகள் இருப்பதாக கடிதங்கள் மூலமும், பத்திரிகைகள் மூலமும் மாநகரசபையின் செயற்பாட்டுக்கு எதிராக கருத்துத் தெரிவிப்பது வியப்பாகவுள்ளது.

தொடர்ச்சியாக பற்றுச்சீட்டு பெற்றவர்களுக்கு கடை வழங்கப்பட்டுள்ளது. இடையிடையே பற்றுச்சீட்டு பெற்றவர்களுக்கு (சில நாள்கள் வந்துபோனவர்கள்) கடைகள் வழங்கமுடியாதுள்ளது. நீங்கள் விரும்பினால், தங்களுக்கு வழங்கப்பட்ட கடைகளைப் பகிர்ந்து வியாபாரம் செய்ய லாம். மலசல கூட வசதி, நீர் விநியோக வசதிகளுடன் நடைபாதை வியாபாரத்தில் ஒருவரும் ஈடுபடவில்லை என்பதை நினைவில் கொள்ளவும். இவற்றைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இதைக் காரணமாகக் கொண்டு இடமாற்றத்திற்கு இடையூறாகும் விதத்தில் செயற்படமுடியாது. குறிப்பிட்ட தினத்திற்குள் முனீஸ்வரன் வீதியிலுள்ள கடைகளை அகற்றுவதற்கு நீங்கள் ஒத்துழைப்பு வழங்காவிடின் கடைகளை அகற்றுவற்கு சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுதியாக அறியத்தருகின்றேன்.

17.03.2006 ஆம் திகதி முதல் சகல தனியார் மினிபஸ்களும், பண்ணை தரிப்பிடத்தில் நின்று முனீஸ்வரன் வீதியூடாகப் பஸ் நிலையத்தைத் அடைந்து பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடாகியுள்ளது. அதற்கு இனிமேலும் நடைபாதை வியாபாரிகள் இடையூறு செய்வதை அனுமதிக்க முடியாது - என்றுள்ளது. (ஓ)

## டெனிஸ் போட்டி

யாழ்ப்பாணம், ஏப் 13

யாழ். டெனிஸ் கழகம் நடத்தவுள்ள ஆண், பெண் இருபாலாருக்குமான விளையாட்டுப்போட்டிகள் எதிர்வரும் மே மற்றும் யூன் மாதங்களில் இடம் பெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர வீராங்கனைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பபடிவங்களை யாழ்.டெனிஸ் சங்கத்தின் செயலாளர் ஆர். ரமேஷ் (யாழ்ப்பாணக் கல்லூரி), டெனிஸ் இணைப்பாளர் ஜே.சகாயராஜ், இல 13/5 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் ஆகியோரிடம் பெற்றுகொள்ளலாம் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-190)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப்13

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் ஆண்கள் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் நேதாஜி விளையாட்டுக்கழக அணியை வென்றது.

சிறந்த வீரராக பொற்பதி விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த என்.ஜெயதீபன் தெரிவு செய்யப்பட்டார். (ஓ-190)

## சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.13

ஆடிப்பிறப்பை முன்னிட்டு அராலி தெற்கு, களவத்துறை விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மென்பந்து துடுப்பாட்டம், கரபந்தாட்டம் (செற் அப்), வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

துடுப்பாட்டம் 7 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றத்தைக் கொண்டதாக அமையும். எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-202)

## உடற்பயிற்சிப் போட்டி டிறிபேக் வெற்றி

தென்மராட்சி,ஏப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆண், பெண் அணிகள் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தில் இப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் ஆண்கள் பிரிவில் கைதடி நாவற்குளி அ.த.க.பாடசாலை, மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவையும் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கைதடி நாவற்குளி அ.த.க. பாடசாலை ஆசியவையும் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப்பெற்றன. (ஓ-117)

## யாழ். செயலக அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.13

சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டச் செயலக அணி வெற்றிபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மாவட்டச் செயலக அணியும் யாழ். மாநகர சபை அணியும் மோதின.

இதில் யாழ்.மாவட்ட செயலக அணி 6:2 என்ற கோல்கணக்கில் யாழ். மாநகர சபை அணியை தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (ஓ-190)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 04 - 1917



மறைவு 13 - 04 - 2005

**திருமதி பராசக்தி வேலுப்பிள்ளை**

(நெடுந்தீவு)

குடும்பத்தின் குலவிளக்காய் நம் அன்புத் தெய்வமாய்
என்றும் மறவாத அன்புடன் எம்மை அரவணைத்து
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தாயே! எம் உள்ளம் உள்ளவரை
மறையாது உங்களின் நினைவுகள்!

61, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (49422)

மகன், மருமகள்,
பேரன்,பூட்டன்.



## மரண அறிவித்தல்

**திருமதி றெஜினா கந்தசாமி (சறோ)**



கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 64 கண்டிவீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜினா கந்தசாமி (சறோ) அவர்கள் 11.04.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம் கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சொலமன் ஜோசப் - திருமதி மேரி மாக்கிறெட் தம்பதி யரின் அன்பு மகளும் விஜிக்காந்தன் (பிரதேச விற்பனை அதிகாரி மிற்சுஜி சிமென்ற்), விஜித்தா ஆகியோரின் அன்புத் தாயும், அரியட், புளோரா, அமிர்தா (ஆசிரியை - யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), சாந்தி, சுகுணா, அருணா, அனிற்றோ ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.விமலேந்திரனின் (அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை) மாமியும் வினோ சாயினி, வித்தியாயினி, சரோமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 15.04.2006 சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64, கண்டிவீதி,
சுண்டுக்குளி. (49426)

தகவல்
S.R. கந்தசாமி (கணவர்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 15 02 1932



இறப்பு 14 03 2006

### அமரர் மாணிக்கம் செல்வி

பரிவோடு எம்மை வளர்த்து
பாசமாய் அரவணைத்த அம்மாவே!
காலமெல்லாம் எமைவிட்டுப் போனதேனோ!
கண்டகனவுகள் நனவாகும் முன்பே
காலனவன் சடுதியாய் அழைத்தானோ?

நாகநாதன் வீதி,
கச்சாய் றோட்,
கொடிகாமம்.

(49434)
(54-49-17)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின்
இணையத்தின் துயர் பகிர்வு

கியூடெக்-கரிதாஸ் நிறுவனத்தின் பணியாளர்களான
**சண்முகரட்ணம் காந்தாபத்மநாபன்**
**செல்வேந்திரா பிரதீப்குமார்**

ஆகியோர் 10.04.2006 அன்று மிருசுவிலில் ஏற்பட்ட துயர சம்பவத்தில் சிக்குண்டு அகால மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கியூடெக் - கரிதாஸ் நிறுவனத்திற்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் சம்பவத்தில் காயமுற்ற ஊழியர்கள் நலன் பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (49436)

-இணைய அங்கத்தவர்கள்.

---

## இதய அஞ்சலி



எனது அன்பு நண்பர் நாகேந்திரம்
அவர்களின் அன்புத் தந்தை

### சரவணை கந்தசாமி

*அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தேன். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.*

திர்ஷிகா கலைக்கூடம்,
அரசடி லேன்,
திருநெல்வேலி.

ந.சற்குருநாதன்
(குரு)
ஆச்சாரியார்

---

## மரண அறிவித்தல்கள்

### *சீனியர் வேலுப்பிள்ளை*

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூவை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (12.04.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும் தமிழ்ச்செல்வி (செல்வா), சந்திரமோகன் (மோகன்), தயாபரன், கலைச்செல்வி (கலா), வசிகரன் (வசி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தி.மைக்கல்
39, சோமசுந்தரம்
அவனியூ,
யாழ்ப்பாணம்.
T.P.:222 3858

தகவல்:
பிள்ளைகள்.

(49492)
(54-49-17)

### வே.ச.இரத்தினம்
(V. C. கிளாக்கர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் கிராமசபையின் பிரதம லிகிதரும் அமுதசுரபி உறுப்பினருமான வே.சங்கரப்பிள்ளை இரத்தினம் அவர்கள் ஆஸ்திரேலியாவில் சித்திரை 12இல் காலமாகி விட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்-
சோமேஸ்வரபிள்ளை-நகுலேஸ்வரி
(மருகர்-மகள்)

(49435)
(54-49-17)

---

## மரண அறிவித்தல்

### *சங்கரப்பிள்ளை இரத்தினம்*
(ஓய்வுபெற்ற கிராமசபை லிகிதர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை இரத்தினம் அவர்கள் 12.04.2006 இல் ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் பராசக்தியின் (ஆஸ்திரேலியா) அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-வயிரிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா பிள்ளை -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், பொன்னம்பலம், கமலாம்பிகை, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), சிவநாதன் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), நகுலேஸ்வரி (நீதிமன்றம், யாழ்ப்பாணம்), பரமேஸ்வரி (கொழும்பு), காசிநாதன் (ஆஸ்திரேலியா), திலகேஸ்வரி (ஆஸ்திரேலியா), குலநாதன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலசிங்கம் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), இராஜேஸ்வரி, சோமேஸ்வரபிள்ளை (அதிபர்-ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), காலஞ்சென்ற கணேசமூர்த்தி (பொலீஸ் உத்தியோகத்தர்), ஜெயந்தி (ஆஸ்தி ரேலியா), பிரபாகரன் (இன்பத்தமிழ் ஒலி, ஒளிபரப்பு நிலையம்- ஆஸ்திரேலியா), கங்கா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, கலாசாலை வீதி,
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7323

(49438)
(54-49-17)

தகவல்:
இரத்தினம் சிவநாதன்
(மகன்)

---

## மரண அறிவித்தல்

### *செல்வேந்திரா பிரதீப்குமார்*



(சமூகபங்கு செயற்பாட்டு அலுவலர்)
(HUDEC - CARITHAS - JAFFNA)

பங்களா வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வேந்திரா பிரதீப்குமார் அவர்கள் (10.04.2006) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் செல்வேந்திரா **(J.P)**- காலஞ்சென்ற சுசிலாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் நவநிதியின் அன்புக் கணவரும் பிரசன்னாவின் அன்பு அண்ணாவும் தில்லை நடராஜா -காலஞ்சென்ற இராச மலர், தம்பதியர், சந்திரபாலன் - மங்கையர்திலகம் தம்பதியர், பாலச்சந்திரன் -ஈஸ்வரதேவி தம்பதியர், உதயச்சந்திரன் ரஞ்சனி வசந்தகுமாரி தம்பதியர், காலஞ்சென்ற நாக நாதன் மற்றும் சாரதாதேவி, காலஞ்சென்ற சிவராஜபிள்ளை மற்றும் ஆனந்ததேவி ஆகியோரின் அன்பு மருமகனும் சகுந்தலாதேவி, அப்புத்துரை பாலகௌரி, இராவிந்திரன், புவனேஸ்வரி பிறேமிளா, மேகலா, உதயகுமார், சிவாணி, சிறாணி, சிவஜன், அருள்நிதி, மாலா, கல்பனா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2006) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்களா வீதி, மல்லாகம்.

(சி-48937)
(54-49-17)

தகவல்:
பிரசன்னா [illegible]

---



### காரைநகருக்கு புதிய உதவி அரச அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

காரைநகர் உதவி அரச அதிபராக த.ஜெயசீலன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இது வரை காலமும் மருதங்கேணி உதவி அரச அதிபராகக் கடமையாற்றிவந்தார்.

இவரது நியமனம் தொடர்பான உத்தி யோக பூர்வக் கடிதம் நேற்று காரை நகர் உதவி அரச அதிபர் பணிமனைக்கு கிடைத் தது.

கடந்த ஒன்றரை வருடகால மாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் இங்கு பதில் கடமையாற் றிவந்தார். (எ)

---

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி தம்பு அன்னப்பிள்ளை*



யாழ்ப்பாணம், 377/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது நந்தாவில் வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலில் வசிப்பவருமாகிய திருமதி தம்பு அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (12.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புவின் அன்பு மனைவியும் சரஸ்வதி, தம்பிராசா ஆகியோரின் அன்புத் தாயும் துரைசிங்கத்தின் அன்பு மாமியாரும் உதயகுலசிங்கம் (பிரான்ஸ்), கௌசிகா (பிரான்ஸ்), தயாளகுலசிங்கம் (லண்டன்), வாருணி (லண்டன்), உதயகுமார் (பிரான்ஸ்), சித்திராவதி (பிரான்ஸ்), தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்),வியஜகுலசிங்கம் (இராமநாதன் இசைத்துறை, இறுதி ஆண்டு), சுகுணாவதி (H.N.D.A) பிறேமாவதி (கிழக்குப்பல்கலைக்கழகம், இறுதி ஆண்டு), ஹஜேந்திரகுலசிங்கம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யுவானா (பிரான்ஸ்), கர்யோர்னா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2006) வியாழக்கிழமை பி.ப 3 மணி அளவில் தாவடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49492)
(54-49-17)

தகவல்:
து.சரஸ்வதி (மகள்).
T.P.:0773222950

### *செல்லத்துரை கஜேந்திரன்*



(ஓட்டோ உரிமையாளரும் சாரதியும்)

மின்சார நிலைய வீதி,சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கஜேந்திரன் நேற்று (12.04.2006) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் வனிதாவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

(49430)
(54-49-17)

தகவல்:
குடும்பத்தினர்.

### *பொன்னையா பஞ்சநாதன்*
(R.M.P, பதிவு வைத்தியர்)

புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் 10/20, பெரியமுல்லை நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பஞ்சநாதன் அவர்கள் 09.04.2006 ஞாயிற்றுக்கிழமை பிலிப்பைன்ஸில் **(Phillipines)** காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும் பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற சபாரத்தினம் **(B.sc.)**, காலஞ்சென்ற சிங்காரம், திருமதி மரகதமணிதேவி,தேவசிகாமணி (கனடா), கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி பத்மினி சற்குணராசா (சிங்கப்பூர்), காலஞ்சென்ற திருமதி நந்தினி சுந்தரலிங்கம் (155, டானி றோட், மருதானை), திருமதி மாலதி முருகபூபதி (ஆஸ்திரேலியா), விக்கினேஸ்வரன் (பிலிப்பைன்ஸ்), திருமதி சூரியகுமாரி சிறீதரன் (டோகா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஐஸ்வரியா, மதுராந்தகி, மஞ்சரி, சங்கீதா, காருண்ணியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.04.2006) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிலிப்பைன்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சபர்பதி'
பெரியவளவு,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

(49427)
(54-49-17)

தகவல்:
பொ.கெங்காதரன்
(சகோதரன்).

### *திருமதி கனகையா பேரின்பவதி*



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகையா பேரின்பவதி அவர்கள் கடந்த 11.04.2006 செவ்வாய்க்கிழமை அன்று இரவு இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் மனோன்மணி காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அருணாசலம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் நாகமுத்து. கனகையா (ஓய்வுபெற்ற மின்னியலாளர், உள்ளூராட்சி சபை) அவர்களின் அன்பு மனைவியும் தியாகசீலன் (லண்டன்), தியாகவதி (ஆசிரியை, கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் அனுஷா (லண்டன்), சிவகுமாரன் (எழுதுவினைஞர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும் லண்டனில் வசிப்பவர்களான கிருஷன், அபிஷா, திபிஷா மற்றும் சிவானிஜா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பரியோவான் கல்லூரி மாணவர்களான சிவானுஜன், பவானுஜன், சிவகஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.46/10, ஆசீர்வாதப்பர் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (13.04.2006) வியாழக்கிழமை பி.ப.4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/10, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(49437)
(54-49-17)

தகவல்:
நாகமுத்து கனகையா (கணவர்),
(ஓய்வுபெற்ற மின்னியலாளர் உள்ளூராட்சி சபை),
கனகையா தியாகசீலன் (மகன்-லண்டன்)
திரு.திருமதி சி. தியாகவதி (மகள்)
(ஆசிரியை, கிளிநொச்சி மத்திய கல்லூரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்மோட்டை கடலில் யுத்தம்?

நேற்றுப் பிற்பகல் 2.15 மணி அளவில் கிழக்கில் புல்மோட்டைக்கு அப்பால் உள்ள ஆழ்கடலில் புலிகளுக்கும், அரச கடற்படைக்கும் இடையில் ஒரு பெரும் யுத்தம் மூண்டதாகச் செய்திகள் வெளியாகின. எனினும் அது பற்றிய மேலதிக விவரங்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ)

## ஓட்டோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுண்டவரின் மனைவி தெரிவித்தார். இருவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டதால் தாங்கள் இருவரும் பாதுகாப்புக் கருதி அயல்வீட்டில் சென்று உறங்கிவிட்டு அதிகாலையிலேயே வீடுதிரும்பியதாகவும் அவர் கூறினார்.

குடிசை வீட்டின் உள்ளே வைத்து இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். வீட்டின் வெளியே மறைந்திருந்த கொலையாளிகள் துவாரம் ஒன்றின் வழியாக இவர்மீது சுட்டுள்ளனர். இடுப்புப் பகுதியில் குண்டு பாய்ந்து காணப்பட்டது. இவரது சடலம் நேற்று நண்பகல் சுன்னாகம் பொலீஸாரால் யாழ். மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-7-15)(33)

## இந்தியப் பிரதமர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதன் அவசியத்தையும் இந்தியப் பிரதமர், இலங்கை ஜனாதிபதிக்கு சிரத்தையோடு எடுத்துரைத்தார் எனத்தெரிகிறது.

நேற்றைய திருகோணமலை வன்முறைகளையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் உடனடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங், இந்தச் சம்பவம் குறித்து விரிவான விவரங்களைக்கேட்டறிந்துள்ளார்.

அடுத்தகட்ட அமைதிப் பேச்சுகள் குறித்தும், விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் குறித்தும் இந்த உரையாடலின்போது குறிப்பிட்டுக் கூறியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திருகோணமலையில் நிலைமையைச் சுமுகமாக்கத் தாம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறாரென உறுதி கூறினார் என்று தெரிகிறது. இந்தத் தொலைபேசி உரையாடல் குறித்து ஜனாதிபதி செயலகம் நேற்றுமாலை விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த தினங்களில் புலிகளால் பாதுகாப்புப்படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் இன்றைய தினம் திருமலையில் இடம்பெற்ற சம்பவம் ஆகியன குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருக்கிடையில் தொலைபேசி வாயிலாக விசேட கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

குறித்த துயரச் சம்பவங்களைத் தாம் கடுமையாகக் கண்டிக்கிறார் எனவும், அது தொடர்பாகத் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறார் எனவும் இந்தியப் பிரதமர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-க)

## ஜெனீவா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கின்றது' - என்ற தலைப்பில் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாகக் கண்டிப்பதுடன் தாக்குதல்களில் மரணமடைந்தோரின் குடும்பத்தவர்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

- என்று உள்ளது. (எ-க-7-14)

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவு அப்பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

மாணவர் மீதான தாக்குதல் குறித்து அப்பகுதியில் நின்றிருந்த பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களிடம் நீதிவான் கேட்டறிந்தார். எனினும், படையினர் மீதான அச்சம் காரணமாக பொலீஸாரிடம் தகவல் தெரிவிக்க பொதுமக்கள் தயங்கியதாக மேலதிக நீதிவான் தெரிவித்தார்.

இதற்கிடையில், அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இரண்டு படையணிகளின் கட்டளையிடும் அதிகாரிகளை சம்பவ இடத்திற்கு அழைத்த நீதிவான், அவர்களுடன் மாணவர்கள் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து விரிவாக ஆராய்ந்தார். பொதுமக்கள் மீது கண்டபடி தாக்குதல் நடத்தும் அதிகாரம் படையினருக்கு இல்லை. எனினும், முறைப்படியான சட்ட விதிமுறைகளின்படி பொலீஸாரின் துணையுடன் விசாரணை நடத்தப்படுமாயின் அதுவே இருதரப்பாரிடையும் நல்லுறவை வளர்க்கும்.

பொதுமக்கள்மீதான தாக்குதல்கள் தொடருமாயின் தாக்குதலில் ஈடுபடுவோரை பொலீஸாரின் துணையுடன் கைதுசெய்ய வேண்டிய நிலையும் ஏற்படலாம். வீதிக்காவலில் ஈடுபட்டுள்ள படையினர், கறுப்புத் துணிகளினால் முகங்களை மூடிக்கட்டியிருப்பது உடன் தடுக்கப்படல்வேண்டும். இதனால், குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை இனங்காணமுடியாத நிலை ஏற்படும்.

சமாதானத்தை நிலைநாட்டும் பணியில் அரசும் புலிகளும் பேச்சுக்களில் ஈடுபட்டுவரும் இந்த நிலையில், இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் நாட்டில் தொடர்ந்தும் பதற்றநிலைமையினையே உருவாக்கும் - என்று நீதிவான் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

படையினருடனான சந்திப்பையடுத்து யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த நீதிவான், சீருடையினரின் தாக்குதலுக்கு இலக்காகி அங்கு சிகிச்சைபெற்றுவரும் பல்கலைக்கழக மாணவனைச் சந்தித்தார். பொலீஸார் அப்போது சம்பந்தப்பட்ட மாணவனது வாக்குமூலத்தையும் பதிவுசெய்தனர்.

தாக்குதல் நடத்திய சீருடையினரை தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்றும்-

எனினும் தாக்குதலில் ஈடுபட்டவர்களை அடையாளம் காட்டினால் தமக்கே மீண்டும் ஆபத்து என்றும் குறிப்பிட்ட மாணவன், பொலீஸாரிடம் தெரிவித்தார் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (எ)

## தமிழர் தாயக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கடற்படையினர்- ஒட்டுக் குழுவினர் போன்றோரின் பின்னணியில் காடையர்கும்பல் எமது இரத்த உறவுகள் மீது குண்டுகளை வீசியும் வாள்களால் வெட்டிச் சாய்த்துள்ளது. 45 பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

பல கடைகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. இது இவ்வாறு இருக்க, குடாநாட்டில் இன்று (புதன்) அதிகாலை 6.15 மணியளவில் வீட்டு வளவில் வைத்து செல்லத்துரை கஜேந்திரன் என்ற ஓட்டோ சாரதி திட்ட மிட்ட முறையில் இராணுவப் புலனாய்வுத் துறையினருடன் இணைந்து வந்த ஈ.பி.டி.பி. தேச விரோத கும்பலினால் படுகொலை செய்யப்பட்டுள் ளார்.

படுகொலை செய்தவர்கள் பின்னர் ஊரெழு இராணுவ முகாம்முக்குள் சென்றடைந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி, கடந்த 10 ஆம் திகதி உடுவிலைச் சேர்ந்த ஜெகச்கோபி திரவியதாஸ் (வயது -26) என்பவரை வீட்டினுள் நுழைந்து கைது செய்த இராணுவத்தினர் அவரை வானில் ஏற்றி முகத்தை கறுப்புத் துணியால் கட்டிப்பின்னர் வீட்டினுள் வைத்து சுட்டுக்காயப்படுத்தியுள்ளனர். பின்னர் இவரை நிர்வாணமாக வானில் ஏற்றிச் சென்றனர்.

அவர் இதுவரை விடுவிக்கப்பட வில்லை - அத்தோடு யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் பரமேஸ்வரா சந்தியில் வைத்து இராணுத்தால் தாக்கப்பட்டுள்ளனர்.

இது மாணவர்கள் மத்தியில் அச்சத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது-

யாழ். நகரப் பகுதிகளில் இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டு மக்கள் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் அரசு செயற்பட்டுவருகின்றது-

தீவுப் பகுதியில் ஊர்காவற்றுறையில் இளைஞர் ஒருவர் கைகள் கட்டப்பட்ட நிலையில் கால்கள் முறிக்கப்பட்டு பலத்த அடி காயங்களுடன் படுகொலை செய்யப் பட்டுள்ளார். இவரது சடலம் கடற் படை யினரின் காவலரணுக்கு அண்மையில் உள்ள வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள் ளது- எனவே இவ்வாறான நட வடிக்கை களையும்- படுகொலைகளையும் மஹிந்த அரசு திட்டமிட்ட முறையில் துணைக் குழுக்களின் துணையுடன் ஆரம்பித்து போர் மேகம் கருக்கட்டும் நிலை தோன்றியுள்ளது.

இதை வாய் மூடி மௌனிப்பதாக பார்த்திருக்கமுடியாது.

இதனை உடன் நிறுத்த அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல், இதற்கான விளைவு ஸ்ரீலங்காவை மீள முடியாத பாதைக்கே இட்டுச்செல்லும் இவ்வாறான காட்டுமிராண்டித் தனங்களை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாக கண்டிப்ப தோடு, அடக்கு முறைக்குள் வாழும் இளைஞர்கள், யுவதிகள் பாதுகாப்பான இடம் தேடிச் சென்று அடக்குமுறைக்கு எதிராக போரா டுவதும் இதற்குத் தீர்வாகும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் உள்ளது. (எ-7)

## வாள்வெட்டில் இருவர் காயம்

கொழும்புத்துறைப்பகுதியில் நேற்று இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த இருவர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.சட்ட விரோத மணல் கடத்தல் விவகாரமே வாள் வெட்டில் முடிந்ததாகக் கூறப்பட்டது. (எ-14-7)

## யாழ். சிறைச்சாலையில் புதுவருட விசேட நிகழ்வு

யாழ்.சிறைச்சாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் புதுவருட தினமான நாளை வெள்ளிக்கிழமை சிறைச்சாலையில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

புதுவருட விசேட நிகழ்வு தொடர்பான கூட்டம் நேற்று யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் , எஸ்.ஸ்ரீதரன் மற்றும் சாயி சம்மேளனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி வசந்தசேனன் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதில், சத்யசாயி பஜனை, சிற்றுண்டி பரிமாறுதல் என்பனவற்றை நாளை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (எ)

## தம்பாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிகள் மற்றும் போராளிகள் வன்னிக்கு வருவதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கம் உரியமுறையில் மேற்கொள்ளாத விடத்து, தமக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாமே செய்துகொண்டு கடற்போக்குவரத்துச் செய்து வன்னிக்கு வருவார்களென விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தனர்.

ஆனாலும், விடுதலைப் புலிகளின் இந்தக் கூற்றை திட்டவட்டமாக ஆட்சேபித்து நிராகரித்திருக்கும் அரசாங்கம், இவ்வாறு தமது சுய பாதுகாப்புடன் விடுதலைப்புலிகள் கிழக்கிலிருந்து வன்னிக்குக் கடல் மார்க்கமாகச் செல்ல முற்பட்டால், அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்த வேண்டிவருமென்று உறுதியாகக் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித்த கொஹோன்ன, அரசாங்கத்தின் இந்தத் தகவலை கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் ஊடாகப் புலிகளுக்கு அறிவித்திருக்கிறாரென்று கூறப்படுகிறது.

தமது சுய பாதுகாப்புடன் புலிகள் கிழக்கிலிருந்து வன்னிக்குச் செல்லும்போது பாதுகாப்புத் தரப்பு அதனைத் தடுத்து நிறுத்தினால் இரு தரப்பினரிடையேயும் மோதல் ஏற்பட்டு அது பெரும் யுத்தமாக உருவெடுக்கக் கூடுமென்று அஞ்சப்படுகின்றது. (எ-க)

## குண்டு வெடிப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதல்களில் ஐந்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதையடுத்து திருமலை நகரமக்கள் அச்சமடைந்து இடம் பெயரத் தொடங்கினர். சிங்களக் காடையர்களின் நாசகாரச் செயல்களைக் கட்டுப்படுத்தப் பொலீஸார் எடுத்த நடவடிக்கைகள் வெற்றியளிக்காத காரணத்தினால் முப்படையினரும் பாதுகாப்புக்காக அழைக்கப்பட்டனர் எனத் திருகோணமலைப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரொஹான் அபேவர்த்தன தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து கொழும்பில் பாதுகாப்பு உயர் மாநாடொன்றைக் கூட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திருமலை மாவட்டத்தில் சுமுக நிலையை ஏற் படுத்த உடன் நடவடிக்கைகளை எடுக்கப் பணிப்புரை விடுத்தார். திருமலைச் சம்பவத்தின் பின்னணி குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சர் ரோஹித்த கோகொல்லாகமவை ஜனாதிபதி நேற்று மாலை திருகோணமலைக்கு அனுப்பி வைத்தார்.

நேற்றைய இந்தக் கலவரத்தினால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததால் திருமலை வைத்தியசாலை ஒரே பரபரப்பான நிலையில் இருந்தது. நேற்றைய சம்பவங்களில் கொல்லப்பட்ட பத்துப் பேரின் சடலங்கள் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டன.

தமிழர்களின் பிரபல்யமான வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டுள்ளன. ஐந்துக்கும் அதிகமான வாகனங்கள் தீயில் பொசுங்கி யுள்ளன.

நகரின் மத்திய பகுதியில் தமிழரின் கடைகள், உடைமைகள் எரிக்கப்பட்டதால் அப்பகுதி ஒரே புகை மண்டலமாக நேற்று மாலை காட்சியளித்தது. (எ-க-7-14)

## மரண அறிவித்தல்

### சரவணை கந்தசாமி



திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த சரவணை கந்தசாமி அவர்கள் நேற்று(12.04.2006) புதன்கிழமை கலாமா னார்.

அன்னார் சற்குணவதியின் அன்புக் கணவரும் கோமேஸ்வரி, துரைசிங்கம், இரத்தினேஸ்வரி, ரகுநாதன் (கொழும்பு), நாகேந் திரம் (கொழும்பு), மகேஸ்வரி - பாலா (கனடா), ரவிந்திரன் (கனடா), நந்தினி - குகேந்திரராசா (லண்டன்), ரவிசங்கர்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைசிங்கம், ரகுநாதன், கலாவதி, பாலா (கனடா), கல்பனா, குகேந்திரராசா, விஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*பத்திரகாளி கோயிலடி,*
*திருநெல்வேலி.*

(49440)
(18-17-49)

தகவல்:
இ.துரைசிங்கம்.




**பயணிகளின் கவனத்திற்கு**

**கொழும்பு செல்லும் பெரியபஸ் சேவை**

சித்திரை புதுவருட விடுமுறைக்காக 14, 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது. மீண்டும் 17 ஆம் திகதியில் இருந்து வழமைபோல் நடைபெறும். தினமும் ஒரு பஸ், சேவையில் ஈடுபடுவதால் உங்கள் ஆசனப்பதிவுகளை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**யாழ்.போன்சொப்,**
**இல. 10, நவீன சந்தை மேல்மாடி,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.: 7125, 3817, 0779944449**

(சி-48936)
(18-12-49)


## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



சமய போதனையாளராக - சாதனையாளராக
விளங்கி சமயப்பணியாற்றிய
யாழ். சிவத்தொண்டன்
நிலையத்தைச் சேர்ந்த

**செல்லத்துரை சுவாமி**

அவர்களின் சமாதிச் செய்தியறிந்து
ஆழ்ந்த கவலையடைந்தோம்.
அன்னாரது இறை நிலைக்காகப் பிரார்த்திக்கும்-

*424, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-48939)
(18-17-49)

கரிகணன் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி விஸ்வநாதர் இலட்சுமிப்பிள்ளை

பேராலை, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஸ்வநாதர்இலட்சுமிப்பிள்ளை நேற்று (12.04.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் விஸ்வநாதரின் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்) அன்பு மனைவியும் நல்லதம்பி, தமோதரம்பிள்ளையின் (ஓய்வுபெற்ற அதிபர்) சகோதரியும் பராசக்தி தாமோதரம்பிள்ளையின் மைத்துனியும் ராசம்மா, கனகம்மா, சோதிமலர், சரஸ்வதிப் பிள்ளை, சரோஜினிதேவி (லண்டன்), ராதிகா(ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ் சென்ற கனகராஜா (நீர்ப்பாசன உத்தியோகத்தர்), சந்திரலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சர்வானந்தராஜா (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்), ஆரியு தாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ராஜராஜன் (கனடா), கோகுலராஜன் (லண்டன்), எஸ்.ஸ்ரீகஜன்(வீரகேசரி ஆசிரிய பீடம்), ஸ்ரீதக்ஷன் (லண்டன்), ஸ்ரீறோபன் (லண்டன்), ஸ்ரீபிரியா (இந்து கலாசார திணைக்களம் - கொழும்பு), ஸ்ரீநிமல் (Expo NET(PVT) LTD.), ஸ்ரீ ஜெனனி, சர்வாஜினி (இராமநாதன் மகளிர் கல்லூரி- வெள்ளவத்தை), டிலானி (சுண்டுக்குளி மகளிர் கல் லூரி), கஜரூபன் (யாழ்.மத்திய கல்லூரி), தர்ஷன் (யாழ். மத்தியகல்லூரி), பிரசன்னா (லண்டன்), ஆரணி (லண்டன்), ரதீஸ் (ஹொலண்ட்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(13.04.2006) வியாழக்கிழமை பேராலை பளையில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணியளவில் பேராலை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பேராலை,*
*பளை.*

(சி-48)

தகவல்:
மக்கள், பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.04.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,**

**2006 மே**

**வெளியீடு 02**

# மாதிரி வினாப்பத்திரம்

## பௌதிகவியல் - I

**திரு. பொ. தவசிதன். B.Sc. திருகோணமலை.**

*பகுதி - 1*


*கணிப்பான்கள் பயன்படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.*
*எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ($g = 10\ Nkg^{-1}$)*

01. பின்வருவனவற்றுள் மின்தடையின் பரிமாணம் எது? (மின்னோட்டத்தின் பரிமாணம் -I)
 1. $MLT^{-2}I^{-1}$ 2. $ML^2T^{-3}I^{-2}$ 3. $ML^2T^2I^{-2}$ 4. $ML^{-2}T^3I^{-2}$ 5. $MLT^{-1}I^{-1}$

02. ஓர் எளிய ஊசல் ஒன்றின் இழையின் நீளம் 69% ஆல் அதிகரிக்கும்போது அதன் அலைவுகாலம் அதிகரிக்கும் வீதம் யாது?
 1. 10% 2. 20% 3. 40% 4. 30% 5. 36%

03. குறிப்பிட்ட கம்பியொன்றின் தடை 3 Ω. இக்கம்பியின் நீளம் இரு மடங்காக்கப்படின் தற்போது கம்பியின் தடை யாது?
 1. 3 Ω 2. 4 Ω 3. 6 Ω 4. 12 Ω 5. 1/4 Ω


04. 20 cm குவிய நீளமுள்ள இரு சம குவிவு வில்லை ஒன்று அருகில் காட்டப்பட்டவாறு சமச்சீராக வெட்டப்படும்போது அதன் ஒரு பகுதியின் குவியத்தின் நீளம் யாது?




 1. 10 cm 2. 20 cm 3. 30 cm 4. 40 cm
 5. 50 cm


05. இடைவர்க மூலவேகம் தொடர்பான கூற்றுகளில் சரியானது எது?
 1. எல்லா வாயுக்களுக்கும் சமவெப்பநிலையில் சமனாகும்
 2. மூலக்கூற்று திணிவிலும், வெப்பநிலையிலும் தங்கி இருக்கும்
 3. வாயுவின் அடர்த்தி, அமுக்கத்தில் தங்கி இல்லை
 4. வாயுவின் கனவளவு வெப்பநிலை என்பவற்றில் மட்டும் தங்கி இருக்கும்
 5. மேற்கூறிய எதுவும் இல்லை.

06. புவியைச்சுற்றி வலம்வரும் சந்திரனது கதி மாறாது எனின் பின்வருவனவற்றுள் எது மாறும்கணியம் தொடர்பானதில் சரியானது?
 A - இயக்க சக்தி B - நேர் கோட்டு உந்தம் C - ஆர்முடுகல்
 1. A மட்டும் 2. B மட்டும் 3. C மட்டும்
 4. A, B மட்டும் 5. B, C மட்டும்

07. 


உருவில் காட்டப்பட்டவாறு 2 kg, 3 kg ஆகிய திணிவுகள் ஒரு விற்சுருளால் இணைக்கப்பட்டு ஒப்பமான தளத்தில் பெரிய திணிவிற்கு 12 N விசையைப் பிரயோகிப்பதன் மூலம் கிடைத்தளத்தில் இழுத்துச் செல்லப்படுகிறது. சிறிய திணிவின் ஆர்முடுகல் $3\ ms^{-2}$ ஆக இருக்கும்போது பெரிய திணிவின் ஆர்முடுகல் யாது?
 1. $1\ ms^{-2}$ 2. $2\ ms^{-2}$ 3. $3\ ms^{-2}$ 4. $4\ ms^{-2}$ 5. $5\ ms^{-2}$

08. படத்தில் காட்டப்பட்ட உயர்த்தியானது ஒரு மனிதனால் சமனிலையில் பேணப்பட்டுள்ளது. உயர்த்தியின் நிறை 30 kg, மனிதனின் நிறை 60 kg ஆக இருக்கும்போது இழையிலுள்ள இழுவை யாது?



 1. 450 N 2. 300 N 3. 600 N
 4. 900 N 5. 250 N


09. T வெப்பநிலையில் 1 mol குறித்த கனவளவு ஒட்சிசன் வாயுவின் அமுக்கம் P எனின் 2T வெப்பநிலையில் இவ்வாயுவின் அமுக்கம் யாது?
 1. P/8 2. P 3. 8P 4. P/2 5. 2P

10. இலட்சிய வாயு ஒன்றின் சமன்பாடு PV = XT ஆல் தரப்படுகிறது. இங்கு X மாறிலி ஏனைய கணியங்கள் வழமையானவை எனின் X தங்கி இருப்பது.
 1. வாயு மூலக் கூற்றுத் திணிவு
 2. வாயு மூலக் கூற்றுகளின் சராசரி இயக்க சக்தி
 3. P,V,T என்பவற்றில்
 4. ஓரலகுக் கனவளவில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை
 5. வெப்பநிலையில் தங்கி இருக்கும்

11. நீளமான இழையில் கட்டித்தொங்கவிடப்பட்ட பொட்கோளம் ஒன்றினுள் திரவம் நிரப்பப்பட்டுள்ளது. பின் இதனடியில் துளை ஒன்று ஏற்படுத்தப்பட்டு கோளம் அலையவிடப்படுகின்றது. அப்போது அதன் அலைவு காலமானது?
 1. மாறாது
 2. கோளத்தினுள் திரவம் வெளியேறும் வரைக்கும் அதிகரிக்கும்
 3. கோளத்தினுள் திரவம் வெளியேறும் வரைக்கும் குறையும்
 4. முதலில் அதிகரிக்கும் பின்னர் குறையும்
 5. அலைவு காலம் குறைந்து பின்னர் அதிகரிக்கும்

12. ரேடார் கருவி ஒன்று 1m அலை நீளமுடை கழி ஒலியை எழுப்புகிறது இது இயங்கிக்கொண்டு இருக்கும் விமானத்தில் பட்டு தெறித்து வருகிறது. இதனால் அலை நீளத்தில் ஏற்பட்ட மாற்றம் $10^{-6}m$ எனின் விமானத்தின் கதி யாது? (கழி ஒலியின் வேகம் $= 3\times10^8\ ms^{-1}$)
 1. $75\ ms^{-1}$ 2. $100\ ms^{-1}$ 3. $125\ ms^{-1}$ 4. $150\ ms^{-1}$ 5. $175 ms^{-1}$

13. ஓர் இருசமக்குவிவு வில்லையானது அதன் மத்தியபகுதி படத்தில் காட்டிய வாறு கறுப்புப் பூச்சிடப்பட்டது. ஆயின், அதனால் உருவாக்கப்படும் விம்பம் பற்றிய கூற்றுக்களில் சரியானது?




 1. விம்பம் தெரியாது 2. அரைவாசி விம்பம் தெரியும்
 3. விம்பம் நடுப்பகுதி மறைந்து தோன்றும்
 4. விம்பம் முழுமையாகத்தெரியும் ஆனால் தெளிவு குறைவாக இருக்கும்
 5. விம்பம் முழுமையாகத் தெரியாது

14. வாயு மூலக்கூறுகளின் வேகம் முறையே $1\ ms^{-1}, 2\ ms^{-1}, 3\ ms^{-1}, 4\ ms^{-1}$ எனின் இவற்றின் இடை வேகம் பின்வருவனவற்றுள் எது?
 1. $15/2\ ms^{-1}$ 2. $10/2\ ms^{-1}$ 3. $2.5\ ms^{-1}$ 4. $15/2\ ms^{1}$ 5. $2\ ms^{-1}$

15. துணிக்கை ஒன்றானது 100 cm ஆரையுடைய வட்டப்பாதையில் செக்கனுக்கு 2 சுழற்சிகளை ஆற்றுகின்றது. ஆயின், இத்துணிக்கையின் ஆர்முடுகல் யாது?
 1. $\pi^2/2$ 2. $\pi^2$ 3. $2\pi^2$ 4. $16\pi^2$ 5. $100\pi^2$

16. தரப்பட்ட சுற்றில் கலமும் அம்பியர்மானியும் புறக்கணிக் கத்தக்க அகத்தடையை உடையது எனின் அம்பியர் மானியின் வாசிப்பு யாது?





 1. 1 A 2. 2 A 3. 3A
 4. 4 A 5. 5 A


17. 20 V மின்னியக்க விசையும் 1Ω உட்தடையையும் உடைய கலமொன்றின் முனைகளுக்கு இடையில் 9 Ω தடை இணைக்கப்பட்டுள்ளபோது உட்தடையில் பிறப்பிக்கப்பட்ட வலு யாது?
 1. 4W 2. 18 W 3. 27 W
 4. 36 W 5. 40 W

18. வளியின் ஒலியலைகள் முனைவாக்கம் அடைவதில்லை காரணம யாது?
 1. இது செல்வதற்கு ஊடகம் தேவை என்பதால்
 2. இது நீள் பக்க அலை என்பதால்
 3. இது குறுக்கலை என்பதால்
 4. இது இழிவு வேகத்துடன் செல்வதால்
 5. எதுவும் அல்ல

19. தங்குதன் இழை மின்குமிழ் ஒன்று எரிகையில் அதனூடான மின்னோட்டமானது நேரத்துடன் மாறுபடுவதற்கான வரைபு எது?




20. முறிவுச்சுட்டி $\sqrt{2}$ ஐ உடைய இழிவு விலகல் நிலையில் உள்ள அரியம் ஒன்றின் அரியக்கோணம் $60^0$ ஆகும். இதன் இழிவு விலகலுக்குரிய படுகோணம் யாது?
 1. $30^0$ 2. $45^0$ 3. $60^0$ 4. $75^0$ 5. $135^0$

21. 

படத்தில் காட்டப்பட்டவாறு தரையில் வைக்கப்பட்ட விற்சுருளின் மேல் நுனியில் பொருத்தப்பட்ட m என்னும் திணிவானது f என்னும் அதிர்வெண்ணுடன் புவியீர்ப்பின் கீழ் அதிருகின்றது. இத் திணிவு அடையக்கூடிய அதியுயர் வீச்சம் யாது?
 1. $\frac{g}{4\pi^2f^2}$ 2. $\frac{mg}{4\pi^2f^2}$ 3. $\frac{g}{2\pi^2f^2}$ 4. $\frac{mg}{2\pi^2f^2}$ 5. $\frac{gf}{4\pi^2}$


22. $1\ mm^2$ குறுக்குவெட்டுப்பரப்புடைய 0.8 A மின்னோட்டம் பாயும் கடத்தியொன்றில் $e^n$ ஆனது $100\ ms^{-1}$ என்னும் வேகத்துடன் பயணம் செய்கிறதாயின் கடத்தியில் $e^n$ எனின் அடர்த்தி யாது? ( $e^n$எனின் ஏற்றம் $1.6 \times 10^{-19} c$ )
 1. $5\times 10^{22}\ m^{-3}$ 2. $10^{17}\ m^{-3}$ 3. $10^{16}\ msc^{-1}$
 4. $10^{15} Asc^{-1}$ 5. $10^{15} Am^{-3}c^{-1}s$

23. ஒலியின் செறிவு நான்கு மடங்கால் அதிகரிப்பின் ஒலிச்செறிவு மட்ட அதிகரிப்பு யாது? ($\log 4 = 0.6$)
 1. 2dB 2. 4dB 3. 5dB 4. 6dB 5. 8dB

24. ஒரு பொருளின் இயக்கச் சக்தி 69% ஆல் அதிகரிக்கும் போது அதன் உந்தம் எத்தனை வீதத்தால் அதிகரிக்கும்?
 1. 13% 2. 169% 3. 69% 4. 30% 5. 130%


25. மூலக்கூறுகளின் சராசரி இயக்க சக்தியினது நேர் விகிதசமனாக இருப்பது. (இங்கு T-தனிவெப்பநிலை)
 1. $T^{-1}$ 2. T 3. $T^{1/2}$ 4. $T^2$ 5. $T^3$

26. படத்தில் காட்டப்பட்ட அழுத்தமானிச் சுற்றில் சமநிலைப் புள்ளி பெறப்படாமைக்கு காரணமாக இருக்கக்கூடியது யாது?
 (A) $E > E_p$ (B) $V_{AB} < E$
 (C) $E_p$, E இன் நேர் முனைகள் ஒரே திசையிலிருத்தல்
 1. A, B 2. B, C 3. A, B, C
 4. A, C 5. யாவும்பிழை




27. ஒலிமுதல் ஒன்று நிலையாக உள்ள ஒருவரை தாண்டி ஒலியின் வேகத்தின் 1/10 மடங்குடன் செல்கிறதாயின் அவர் உணரும் உயர்வு, இழிவு தோற்ற மீடிறனுக்கும் உள்ள விகிதம் யாது?
 1. 9/11 2. 11/10 3. $(11/10)^2$
 4. $(10/9)^2$ 5. 11/9

28. Heat Engine ஒன்றின் இயக்கத்தின்போது வாயுவின் அமுக்கமானது கனவளவுடன் மாறுவதை படம் (ஹானோட் வட்டம்) காட்டுகிறது. இதில் சமவெப்ப மாற்றத்தைக் குறிப்பது எது?





 1. AB,BC 2. AB,CD 3. AD,BC
 4. BC,CD 5. AD,DC

29. K என்பது போட்ஸ்மன் மாறிலியாக இருக்கும் போது T தனிவெப்பநிலையில் மூலக்கூறுகளின் சராசரி இயக்க சக்திக்கான தொடர்பு களில் சரியானது?
 1. KT/2 2. 3KT/4 3. KT 4. 3KT/2 5. $1/2\ KT^2$

30. மீற்றர் பாலத்தைக் கொண்டு பரிசோதனை செய்யும்போது கவனிக்கப்பட வேண்டியதில் சரியானவை எவை?
 (A) மீற்றர் பால கம்பியின் நடுப்புள்ளியில் சமநிலைப்புள்ளி பெறத்தக்கதாக மாறும் தடையை மாற்றவேண்டும்.
 (B) சுற்றில் மெல்லிய Cu தகடுகள் பயன்படுத்தவேண்டும்.
 (C) வழுக்கியை கம்பியில் தொடுகையில் வைத்துக்கொண்டு அசைத்தல் வேண்டும்.
 1. A 2. B 3. C 4. B, C 5. A, C


31. எளிமை இசை இயக்கத்தை ஆற்றும் துணிக்கை ஒன்றின் வேகமானது இடப்பெயர்ச்சியுடன் மாறுபடுவதற்கான வரைபு பின்வருவனவற்றுள் எது?




32. விமானம் ஒன்றின் மேல், கீழாக வளியானது 2V, V வேகங்களுடன் பயணம் செய்யும் போது $\rho$ அடர்த்தியுடைய வளியில் A பலிதப்பரப்புடைய சிறகைக்கொண்ட இவ் விமானத்தில் வளியால் உஞற்றும் விசை யாது?
 1. $1/2\ \rho AV^2$ 2. $1/3\ \rho AV^2$ 3. $2\ \rho AV^2$ 4. $3/2\ \rho AV^2$ 5. $\rho AV^2$

33. U குழாய் ஒன்றினுள் 13.6 சார்அடர்த்தியுள்ள திரவம் இடப்பட்டுள்ளது. குழாயின் ஒரு முனையில் 27.2 cm உயரத்துக்கு நீர் இடப்படும்போது மறு அந்தத்தில் ஏற்படும் திரவம் யாது?
 1. 1 cm 2. 2 cm 3. 3 cm
 4. 4 cm 5. 5 cm

34. கோள வடிவமான பொருள் ஒன்று வளிமண்டலத்தில் புவியீர்ப்பின் கீழ் விழும் போது அதில் தாக்கும் விளையுள் விசை இடப்பெயர்ச்சியுடன் மாறுபடுவதற்கான வரைபு யாது?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. 1.5* முறிவுச் சுட்டியையுடைய 4 mm தடிப்புடைய காண்ணாடியினுள் ஒளிக்கதிர் பயணம் செய்ய எடுக்கும் நேரம் என்ன?
1. $1.33 \times 10^{-1}s$ 2. $(8/9) \times 10^{-11}s$ 3. $10^{-11}s$
4. $2\times10^{-11}s$ 5. $1.5\times10^{-11}s$


36. சுரமானிக் கப்பி ஒன்று 95 cm, 100 cm ஆகிய நீளங்களில் இசைக்கவர் ஒன்றுடன் செக்கனுக்கு 4 அடிப்பைக் கொடுக்கின்றது. ஆயின், . இசைக்கவரின் அதிர்வெண் யாது?
1. 148 Hz 2. 152 Hz 3. 156 Hz 4. 160 Hz 5. 150 Hz


37. $E_0$, $E_h$ என்பன முறையே ஒட்சிசன், ஐதரசன் வாயுக்களின் சராசரி இயக்க சக்தியாகும் எனின் ஒரே வெப்ப நிலையில் இவை உள்ள போது கீழே தரப்பட்ட கூற்றுகளில் சரியானது?
1. $E_0>E_h$ 2. $E_0=E_h$ 3. $E_0<E_h$ 4. $2E_0=E_h$ 5. $8E_h=E_0$

38. தரப்பட்ட கடத்தியொன்றின் தடை 10Ω. இது வட்டமாக வளைக்கப்படும் போது விட்டத்தின் வழியே பரிதியில் உள்ள இரு புள்ளிகளுக்கிடையில் காணப்படும் சமவலுத்தடை யாது?
1. 2Ω 2. 2.5Ω 3. 5Ω 4. 10Ω 5. 20Ω

39. 

தரப்பட்ட வளைவேலைப்பாட்டில் ஒவ்வொன்றும் 3Ω தடையுடையன ஆயின் A, B இற்கிடையிலான சமவலுத்தடை யாது?
1. 1Ω 2. 2Ω 3. 3Ω
4. 4Ω 5. 5Ω

40. ஒரு முனை மூடிய குழாயொன்றினுள் உள்ள வளி முதலாம் மேற்றொனியில் பரிவுறுகின்றபோது குழாயிலுள்ள வளியின் அமுக்கம் குழாயின் மூடிய முனையிலிருந்து நீளத்துடன் மாறுபடும் விதத்தைச் சரியாகக் காட்டுவது.
1. 2. 3. 4. 5.


41. 

ஒரு தளக் காவிகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் விளைவு பின்வருவனவற்றுள் எது?
1. பூச்சியம் 2. $\overrightarrow{AC}$ 3. $2\overrightarrow{AB}$
4. $\overrightarrow{CA}$ 5. $\overrightarrow{EC}$

(பௌதிகவியல் I இன் தொடர்ச்சி 20.04.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 02

# உயிரியல் - II

Mr.R. Easvarathasan B.Sc. (Cey), Dip.In Edu., M.Ed.

(உயிரியல் அமைப்புக்கட்டுரையின் விடைகளின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.)

**3)A.** (i) * சிறிதளவு உற்பத்தி / சுரத்தில் / போதுமானது
* இரசாயனச் செய்தி காவி
* ஒரு பகுதியில் உற்பத்தியாகி - இன்னொரு பகுதிக்குக் கடத்தப்பட்டுத் தொழிற்படும்
* உடற்தொழிற்பாட்டுக்குரிய தூண்டற்பேறு / நிரோதித்தலை ஏற்படுத்தல்.
(4 × 2 = 8 Marks)

(ii)


| | தாவர ஓமோன் | விலங்கு ஓமோன் |
|---|---|---|
| ஆக்கக்கூறு | *எளிய சேதனச் சேர்வை | *சிக்கலானசேதனச்சேர்வை |
| கடத்தப்படுவது | *உரியம், காழ் ஊடாக | *குருதி, நிணநீர் ஊடாக |
| சுரக்குமிடம | *குறிப்பிட்ட அங்கம் இல்லை. | *குறிப்பிட்ட அகஞ்சுரக்கும் அங்கங்களில் |

(6 × 2 = 12 Marks)

(iii)
1. தாவரக்கலப்பிரிவு ⟶ Cytokinin
2. தாவர மூப்பு தாமதமடைதல் ⟶ Cytokinin
3. பழம் கனிதல் ⟶ Ethylene
4. மாறிழையம் தொழிற்பாடு அதிகரித்தல் ⟶ Cytokinin
5. உச்சி ஆட்சி ⟶ Auxin
6. கருப்பைத்தசைச் சுருக்கம் ⟶ Oxytocin
7. பாலுற்பத்தி இழையவிருத்தி ⟶ Prolactin
8. விலங்குக் கலப் பிரிவுத் தூண்டல் ⟶ **HowthHom one**
9. அதிரீலை மேற்பட்டை தூண்டல் ⟶ ACTH
10. நீள் மீள அகத்துறுஞ்சல் ⟶ ADH

(10 × 2 = 20 Marks)

**B.** (i) OestrogenProgesterone (2 × 2 = 4 Marks)
(ii) சூலிடல் - LH
மஞ்சள் சடல விருத்தி - LH
கிராபியன் புடைப்புவிருத்தி - FSH (3 × 2 = 6 Marks)
(iii) பெற்றோர் மடியத்தை ஒத்த வழித்தோற்றங்களை உருவாக்க, நிறமூர்த்த மடிய சமநிலை பேணுதல். (2 × 2 = 4 Marks)



(1 × 2 = 2 Marks)

C) (i) மஞ்சள் சடலத்தால் (= 2 Marks)
(ii) * கருப்பை அகத்தோலின் சீதச் சுரப்பை அதிகரிக்கச் செய்தல்.
* உட்பதித்தலுக்குத் தயாராக்குதல். (2 × 2 = 4 Marks)
(iii) * அதிகளவு Progesterone உள்ளநிலையில்
* LH ஓமோன் சுரப்புக் குறைக்கப்படல்
* மஞ்சள் சடலம் சிதைவடைய Progesterone செறிவு குறையும்.
(v) மாறாது நிலையான மட்டத்தில் பேணப்படும். (1 × 2 = 2 Marks)

**D.** (i) A - புறச்செவிக்கால்வாய் / புறச்செவிக்குழி
B - செவிச்சிற்றென்பு / பட்டையுரு என்பு
C - அரைவட்டக்கால்வாய்
D - நத்தைச்சுருள்
E - ஊத்தேக்கியலின் கால்வாய் (Eustachian) (5 × 2 = 10 marks)
(ii) சம்மட்டியுரு என்பு, பட்டையுரு என்பு, ஏந்தியுரு என்பு (3 × 2 = 6 Marks)
(iii) வளி (1×2 = 2 Marks)
(iv) (a) காம்பற்ற கூட்டுக்கண்
(b) விரிமுனைகள் (குடுவையுரு)
(c) உட்செவியின் நத்தைச்சுருளிலுள்ள கோட்டியின் அங்கம்
(3 × 2 = 6 Marks) (51 × 2 = 102 Mar)

4. A. (i) . * இயற்கையில் காணப்படக்கூடியது
* குறித்த நோய்க்கு / நோயாக்கி என்று இல்லாது
* எல்லா நோய்க்கும் எதிராக
* காட்டப்படும் நோய் எதிர்ப்பாற்றல் (4 × 2 = 8 Marks)
(ii) 1. வீக்கம் ஏற்படுதல்
2. தின்குழியச் செயல்
3. உடற்திரவ நுண்ணங்கி எதிரி காணப்படல்
4. தோல், சீத முளிப்படை தடையாக அமைதல்.
(4 × 2 = 8 Marks)
(iii) Bacteria, Fungi, Protogoan, Nematoda, (Virus) any four
(4 × 2 = 8 Marks)
(iv) நுண்ணுயிர்கொல்லி தொழிற்படும் முறை
Penicillin => பற்றீரியா கலச்சுவர் தொகுப்பைக் கட்டுப்படுத்தும்
Tetracyclin=> நுண்ணங்கிகளின் புரதத்தொகுப்பைத் தடைசெய்யும்.
Erythromycin=>நுண்ணங்கிகளின் புரதத்தொகுப்பைத் தடைசெய்யும.
Polymyxin=> கலமென்சவ்வின் தொழிற்பாட்டை நிரோதிக்கும்.
(4 × 2 = 8 Marks)

B. (i) (a) எதயில் அல்ககோல் :*Saccharomyces cerevisiae* / மதுவம்
(1 × 2 = 2 Marks)
(b) வினாகிரி : *Saccharomyces cerevisial* / மதுவம்
*Acetobacter aceti / Gluconobacter*
(2 × 2 = 4 Marks)
(ii) எதயில் அல்ககோல் :

$$C_6H_{12}O_6 \xrightarrow{\text{'மதுவம்'}} 2CO_2 + 2C_2H_5OH + E$$

(1 × 2 = 2 Marks)

வினாகிரி :

$$C_6H_{12}O_6 \xrightarrow{\text{'மதுவம்'}} 2CO_2 + 2C_2H_5OH + E$$

(1 × 2 = 2 Marks)

$$C_2H_5OH + O_2 \xrightarrow[\text{Acetobactor}]{} CH_3COOH$$

(2 × 2 = 4 Marks)

(iii) அமோனியாவேற்றம்
நைத்திரேற்றாக்கம் (2 × 2 = 4 Marks)
(2 × 2 = 4 Marks)
(iii) 1. மலிவான கீழ்படை / மூலப்பொருள் பயன்படுத்தி விளைபொருள பெறலாம்.
2. தாக்கம் விரைவானது.
3. அனுசேபப் பல்வகைமை உடையது.
4. பொதுவான சூழல் நிபந்தயைில் தாக்கம் நிகழ்வதால் உயர் அமுக்கம், உயர் வெப்பநிலை தேவையில்லை
5. பிறப்புரிமைப் பொறியியல் கையாளலாம். any two(2 × 2 = 4 Marks)

C. (i) 1. தகனம்
2. பிரிதல் / நுண்ணங்கிகளால் பிரிகை (Decomposition)
3. ஒளித்தொகுப்பு (Photosynthesis)
4. சுவாசம் (Respiration)
5. இறத்தல் (Death)
6. உயிர்சுவடாதல் / படிவாக்கம் (Sedimentation)
(6 × 2 = 12 Marks)
(ii) * காடழித்தல்
* கூடியளவுசுவட்டு எரிபொருள் / பெற்றோலியப் பொருள் எரித்தல். ( 2 × 2 = 4 Marks)
(iii) பச்சைவீட்டு விளைவு (2 = 2 Marks)

D. (i) CLASS : Zygomycetes (1 × 2 = 2 Marks)
CLASS : Bacidiomycetas (1 × 2 = 2 Marks)
(ii) * வித்திக்கலன் அகவித்தி தோன்றல்
* நுகவித்தி உருவாகுதல். (2 × 2 = 4 Marks)
* சிற்றடிவித்தி தோன்றல்
* கனியுடலம் உருவாகுதல். (2 × 2 = 4 Marks)
(iii) நுகவித்தி (முளைக்கும் போது) (1 × 2 = 2 Marks)
சிற்றடிவித்தி
(iv) ஈட்டம் : * வேர் தீசண / Lichen
அங்கிகள் : * உயர்தாவரம் - பங்கசு / அல்கா - பங்கசு
நன்மைகள் : * போசணை, இடவசதி, பாதுகாப்பு
(3 × 2 = 6 Marks)

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.
தொ.பே. இல. 0714-273035, 0714-220008
**கல்விச்சுடர்**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org